# அரசு ஊழியர்

மாத இதழ்

ARASU OOZHIYAR

Tamil Nadu Government Employees Association's Monthly

2025 அக்டோபர்

மலர்:46 இதழ்:10

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.சீனிவாசன்

ஆசிரியர்: மு.பாஸ்கரன்

ஆசிரியர் குழு:

மு.பாஸ்கரன், மு.சீனிவாசன், சா.டானியல் ஜெயசிங், தெ.வாசுகி, வெ.சோமசுந்தரம், வே.விஜயகுமரன், செ.பிரகாஷ், ச.தினேஷ், இ.மைக்கேல் வில்லியுஷ்பம்

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி

9677003178



முகவரி:

பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,

19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,

எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,

சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200

தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


## உள்ளடக்கம்...


1. பிரதிநிதித்துவ பேரவைகள்... போராட்டங்களுக்கான போர்ப்படையாகட்டும்! தலையங்கம்....................4
2. நமது கனவுகள் வழக்கம் போல்; - கானல் நீரானது! கனவு மெய்ப்பட, களம் காண புறப்படுவோம்!! பொதுச் செயலாளர் மேசையிலிருந்து....................5
3. மாநில பிரதிநிதித்துவ பேரவை வரவேற்புக்குழு அமைப்பு கூட்டம் திருப்பூர்....................9
4. பேரிழப்பு....................9
5. மாவட்ட பேரவை நிகழ்வுகள்....................10
6. மாநில பிரதிநிதித்துவப் பேரவை அறிவிப்பு....................12
7. வட்ட பேரவை நிகழ்வுகள்....................13
8. முறையீடு....................17
9. திண்டிவனம் நகரமன்ற உறுப்பினர் ரம்யா ஊழியர் விரோத போக்கை கண்டித்து ஆர்ப்பாட்டம்....................19
10. சேலம் மாவட்ட மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் உள்ள குறைபாடுகளை களைந்திட வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்......20
11. ஜாக்டோ - ஜியோ பெருந்திரள் முறையீடு -08.09.2025....................21
12. போக்குவரத்து ஊழியர்களின் போராட்டத்திற்கு ஆதரவு ஆர்ப்பாட்டம் -15.09.2025....................25
13. தமிழுக்காக உயிர்நீத்த சங்கரலிங்கனார்....................30
14. AISGEF மாலை நேர தர்ணா போராட்டம் -29.09.2025....................31

தலையங்கம்

# பிரதிநிதித்துவ பேரவைகள்...
# போராட்டங்களுக்கான போர்படையாகட்டும்!

ஸ்தாபன அமைப்பு விதியின்படி வட்ட, மாவட்ட பேரவைகள் தமிழகம் முழுவதும் நடைப்பெற்று வருகின்றன. மாநில செயற்குழு முடிவின் படி மாநில பேரவையை திருப்பூர் மாவட்டத்தில் நடத்துவது என்ற முடிவை அமல்படுத்துகின்ற வகையில் திருப்பூர் மாவட்ட தோழர்கள் சிறப்பாக நடத்துவதற்கான பணிகளை திட்டமிட்டு செய்து வருகின்றனர்.

செப்டம்பர் 30ந் தேதியை தமிழகம் முழுவதும் உள்ள அரசு ஊழியர் ஆசிரியர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்த நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஓய்வூதியக் குழு இடைக்கால அறிக்கையினை தமிழக அரசிடம் அளித்திருப்பதும் அதேமட்டுமல்லாமல் தொடந்து அவுட்சோர்சிங் அரசாணைகளை வெளியிட்டு ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் தனியார்மயமாக்கும் முடிவை ஒரு திராவிட மாடல் அரசு முன்னெடுத்துள்ளதை ஊடக விமர்சகர்கள் முதற்கொண்டு கூட்டணித் தலைவர்கள் வரை ஆச்சரியம் கலந்த அதிர்ச்சியோடு பார்க்கிறார்கள். இதன்மூலம் ஆட்சியாளர்கள் (எந்தக் கட்சியாக இருந்தாலும்) அவர்கள் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை, சட்டப்படியான உரிமைகளைகொடுப்பதற்கு மனமற்றவர்களாக உள்ளார்கள் என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்கள், அரசு ஊழியரக்ள, அரசுப்பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் என அனைத்து அரசு ஊதியம் பெறக்கூடிய குடும்பத்தினர் ஓட்டுக்களை பெறுவதற்காக எந்த நிலைக்கும் இறங்கி வந்து பொய்யான வாக்குறுதிகளைச் சொல்வார்கள் என்பதும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வரும் நிலையில் அரசு ஊழியர் தங்கள் போராட்டங்களை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள்.

சிவில் சமூகத்தைக் கைப்பற்றும் அரசியல்வாதிகளுடைய அஜண்டா தங்குதடையின்றி முன்னோக்கிச் செல்கிறது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, நம்பிக்கைத் துரோகங்களைத்தாங்கிக் கொண்டு முன்னேறும் போர்வீரனைப் போல் இன்றைய காலகட்டத்துக்கான ஒரு போராட்ட வடிவத்தையும், முழக்கங்களையும் உருவாக்கிட வேண்டிய அவசர அவசியம் அரசு ஊழியர்களுக்கு எழுந்துள்ளது. அரசியல்வாதிகள் தங்கள் அஜண்டாவில் சற்றும் பின்வாங்காதபோது நாடாளுமன்றத் தேர்தல் வரும் சூழ்நிலையில் அரசு ஊழியர்களின் அஜண்டா என்ன என்பதை ஆட்சியாளர்கள் உணர இப்போதே உக்கிரமானதொரு போராட்டத்திற்கு அரசு ஊழியர் ஆசிரியர்கள் ஆயத்தமாக வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

பிறப்புக்கு பின்னும் இறப்புக்கு முன்னும் இங்கே மாறாதது என்று எதுவும் இல்லை. அரசு ஊழியர் தாங்கள் விரும்பக்கூடிய மகிழ்ச்சியை மற்றவர்களுக்கும் தேடித்தரும் துடிப்பில் உள்ளனர். அரசு ஊழியர் வர்க்கம் வருங்கால சமூகத்தை படைக்கக்கூடிய வர்க்கம் என்பதை நம்மை மறுப்போர்க்கும் மிதிப்போர்க்கும் மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டும் வகையில் போராட்டங்களில் பங்கேற்க வேண்டிய அவசியம் உள்ளது.

அந்த அடிப்படையில் நமது பேரவை நடவடிக்கைகள்யாவும் எதிர்வரும் போராட்டங்களுக்கான போர்படையாக திகழட்டும்.

- ஆசிரியர்.

# நமது கனவுகள் வழக்கம் போல்; – கானல் நீரானது! கனவு மெய்ப்பட, களம் காண புறப்படுவோம்!!

கடந்த 30.09.2025 அன்று அது நடந்தே விட்டது. கடந்த காலங்களில் இதுபோல் பல்வேறு அரசுகள் தொடர்ந்து நம்மை ஏமாற்றி வந்தாலும், இறுதியில் வெல்வது நமது போராட்டமே. ஒரு பூனை அறையில் மாட்டிக்கொண்டு தன்னை தற்காத்துக்கொள்ள வேறு வழியெ இல்லாமல், புலியாக மாறுவது போல, நாமும் எதிர்பாத்து, எதிர்பாத்து ஏமாந்து, கடைசியில் போராட்டமே நமக்கான தீர்வு என்ற நிலைக்கு தள்ளப்பட்டு, நமது ஏமாற்றங்களை, கோபமாக மடைமாற்றம் செய்து போராட்டக் களம் கண்டு, புரட்சி கீதம் பாடி கோரிக்கைகளை வென்ற வரலாறுகள் ஏராளம்.

அன்றைய காலகட்டத்தில் அரசு ஊழியர்களின் பஞ்சப்படி ரூ.10/- உயர்த்தித்தர வேண்டுமென்ற போது “கஜானா காலியாக உள்ளது. உங்களுக்கு எதற்கு பஞ்சப்படி” என்று சொன்னார்கள்.நியாயமான கோரிக்கைகளுக்காக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராடினால், அவர்களை மக்களைக் கொண்டு எதிர்கொள்வேன் என்று சொன்னார்கள். எனது பெயரிலேயே உங்களுக்கான தீர்வு இருக்கிறது. ஆனால், என்பெயரில் உள்ள முதல்பாதி என் உள்ளம் முழுவதும் நிறைந்துள்ளது. ஆனால், மீதி பாதி தான் கஜானாவில் காலியாகவுள்ளது. என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் வேலை நியமன தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டு இனி அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் காலமுறை ஊதியத்தில் பணிநியமனம் கிடையாது என சட்டம் இயற்றப்பட்ட போது வெகுண்டெழுந்து போராடிய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் 1,76,000 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். மேலும், போராடினால் அவர்களை சாட்டையால் அடித்து வேலைவாங்குவேன் என்று சொன்னார்கள்.

பத்தாம் வகுப்பு படித்துவிட்ட வந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இலட்சக்கணக்கில் சம்பளம் வாங்குகிறார்கள். நம்ம வீட்டு பசங்க இன்ஜினீயரிங் படித்துவிட்டு 30ஆயிறம் வாங்குகிறார்கள். இதுவும் பத்தாதுன்னு போராடினா இது என்னங்க நியாயம். என்று கூறி பத்தாண்டுகள் கோரிக்கைகளை மறுத்தார்கள்.

அவ்வாறு சொன்னவர்களிடம் யாசகம் கேட்காமல், விடாப்பிடியான போராட்டத்தினாலும், அளப்பறிய தியாகத்தினாலும் அவர்கள் தரமுடியாது என்று சொன்னவற்றையெல்லாம் கொஞ்சம் கூட மிச்சம்மீதி இல்லாமல் ஒட்டுமொத்தமாக பெற்ற வரலாறு படைத்துள்ளோம்.

கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது நான் ஆட்சிக்கு வந்தால், உங்களது கோரிக்கைகளை நிறைவேற்றித்தருவேன். என தேர்தல் வாக்குறுதிப்பட்டியலில் வரிசை எண் 309 முதல் 318 வரை நமது கோரிக்கைகளை வரிசை எண் மாறாமல் அச்சடித்து வெளியிட்டவர்தான் இன்றைய முதல்வர் அவர்கள். எனவே, நமக்கான விடியல் தருவார் என மனம் நிறைய நம்பிக்கையோடு தேர்தல் களத்தில் இன்றைய ஆட்சியாளர்களுக்கு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது ஆதரவை தெரிவித்தார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் நான் கொடுத்த வாக்குறுதிகளை 100 நாட்களுக்குள் நிறைவேற்றுவேன் என உறுதியளித்தார்கள்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டில் கலந்துகொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நான் திரும்பிப்ப பார்ப்பவனாக இருக்க மாட்டேன், உங்களில் ஒருவனாக இருப்பேன். என உறுதிமொழி அளித்தார். 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜாக்டோ-ஜியோ வின் சார்பில் நடைபெற்ற இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் கலந்துகொண்ட வாழ்வாதார கோரிக்கை மாநாட்டில் கலந்துகொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆட்சி அரசு ஊழியர்கள், ஆசிரியர்களால் கிடைத்த வெற்றி: எனவே, தேர்தல் கால வாக்குறுதிகளை மறுக்கவில்லை! மறைக்கவில்லை! மறக்க வில்லை! என நமபிக்கையூட்டினார்.

**ஓய்வூதியக்குழு:**

அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து அரசு ஊழியர்கள் போராடிய போதெல்லாம் அழைத்துப்பேசி நிதி நிலைமை சரியில்லை எனவே, கொஞ்சம் பொறுங்கள் என சமாதானப்படுத்தினார்கள். ஆனால், நான்கரை ஆண்டுகள் கழிந்தபின்பும் நமது கோரிக்கைகள் வெறும் வெற்று நம்பிக்கைகளாக இருப்பதை ஏற்றுக்கொள்ள இயலாமல் வேறு வழியின்றி போராட்டக்களத்திற்கு சென்ற போது கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரின் இறுதியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.04.2025 அன்று சரண் விடுப்பு ஒப்படைப்பு 01.10.2025 முதல் அமுல்படுத்தப்படுவது உள்ளிட்ட 9 அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதில் ஓய்வூதியம் வழங்குவது சம்பந்தமாக உயர்திரு. ககன் தீப்சிங் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மூன்று பேர் கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டு புதிய ஓய்வூதியத்திட்டம், ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டம், பழைய ஓய்வூதியத்திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத்திட்டங்களை ஆய்வு செய்து 30.09.2025க்குள் அறிக்கை பெறப்பட்டு அறிவிப்பு வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 18.09.2025 அன்று நடைபெற்ற ஓய்வூதியக்குழுவின் கருத்துக்கேட்புக் கூட்டத்தின் முதல் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அழைக்கப்பட்ட போது பழைய ஓய்வூதியம் தருவதாக வாக்குறுதி அளித்துவிட்டு தற்போது குழு போடப்பட்டிருப்பதற்கு நமது அதிருப்தியை தெரிவித்தோம். அரசின் கூற்றான நிதிச்சுமை காரணம் என்பதை தவறு என பல்வேறு புள்ளிவிபரங்களோடு எழுத்துபூர்வமான அறிக்கை அளித்து இக்குழு 30.09.2025க்கு மேல் கால நீட்டிப்பு செய்யாமல் பழைய ஓய்வூதியத்திட்டத்தை அறிவித்திட வேண்டுமென வலுவான ஆதாரங்களோடும், விவாதித்தோம். நாம் விவாதித்த அறிக்கை பற்றிய முழு விபரங்களை கடந்த செப்டம்பர் மாத அரசு ஊழியர் மாத இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தோழர்கள் வாசிக்க வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச்சட்டம் 309 மற்றும் 149(9) ன்படி ஓய்வூதியம் என்பது சட்டபூர்வ உரிமையாகும். அதை மறுப்பது இந்திய அரசியலமைப்புச்சட்டம் 14க்கு எதிரானது என 1983ல் தொடரப்பட்ட வழக்கில் அரசியல் சாசன அமர்வு கூறியுள்ளது. மேற்கு வங்காளம் இதுவரை பழைய ஓய்வூதியம் வழங்கப்பட்டுவருகிறது. இதனால் அம்மாநில அரசு நிதி நெருக்கடியில் வீழ்ந்துவிடவில்லை. கடந்த இரண்டாண்டுகளாக பழைய ஓய்வூதியம் வழங்கிட ஒத்துக்கொண்டு அவ்வாறு வழங்கினால் PFRDA வில் இதுவரை செலுத்தியுள்ள சந்தா தொகையை திரும்ப வழங்கிட இயலாது என மத்திய அரசு மறுத்த போதும் சட்டீஸ்கர், ஜாா்கண்ட், ராஜஸ்தான், இமாச்சலபிரதேசம் ஆகிய மாநிலங்கள் பழைய ஓய்வூதியம் வழங்கியுள்ளது. அந்த மாநிலங்கள் நிதி நெருக்கடியில் சிக்கிக்கொள்ளவில்லை. தற்போது அதில் ஒரு மாநிலம் ஆட்சி மாற்றத்தினால் மட்டுமே மத்திய அரசின் கொள்கைகளை மீண்டும் புகுத்திட முயற்சிக்கிறது. ஆனால், தமிழ்நாடு அரசு மத்திய அரசு அமுல்படுத்தும் ஊழியர் விரோத, மக்கள் விரோத, தேச விரோத கொள்கைகளுக்கு எதிராக சமரசமற்ற முறையில் எதிர்த்து வருவதோடு Neet தேர்வு, உதய் மின் திட்டம், பொது சிவில் சட்டம், ஒரே நாடு ஒரே தேர்தல், புதிய கல்விக்கொள்கை போன்றவற்றிற்கு மாறாக தமிழ்நாட்டில் தொடர்ந்து எதிர்நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆனால், அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியம் குறித்து ஆய்வுக்குழுவில் மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டது முரண்பாடான விசயமாகும். மேலும், புதிய பென்சன் திட்டம் என்பது தமிழ்நாட்டில் இல்லை. ஏனென்றால் அத்திட்டத்தின் நடைமுறைகள் தமிழ்நாட்டில் இல்லை. மாறாக One time settlement நடைமுறை மட்டுமே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியத்தொகை முழுவதும் தமிழ்நாட்டின் வசமே உள்ளதால், மத்திய அரசின் நிர்பந்தத்திற்கு செவிசாய்க்க வேண்டியதில்லை.

மேற்கண்ட பல்வேறு சாத்தியக்கூறுகள் இருந்தாலும், நிதி நிலை காரணம் காட்டுவது பொய்யான காரணமாகும். இந்தியாவில் வலுவான நிதிநிலை கொண்ட இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு என்பது புள்ளிவிபரங்கள் கூறுகிறது. தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மிகுந்த

ஆவலோடு எதிர்பார்த்திருந்த நிலையில் வழக்கம் போல் 30.09.2025 அன்று ஓய்வூதியக்குழு அறிவிப்பில் தரவுகளின் எண்ணிக்கை அதிகம் என்பதாலும், சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்கள் மற்றும் இந்திய ஆயள் காப்பீட்டு கழகம் ஆகியவற்றோடு கலந்தாய்வுகள் நடத்தப்பட வேண்டியுள்ளதால் கூடுதல் கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே, ஓய்வூதியக்குழு தனது இறுதி அறிக்கையை விரைவில் அரசிற்கு அறிவிக்கும் என செய்தி வெளியிட்டுள்ளது.

**ஸ்தாபனமே நமக்கான கோரிக்கைகளை அடைவதற்கான பாதை:**

இது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும், இவர்களும் மற்றவர்களைப் போலத்தான் என எண்ணத்தை விதைத்துள்ளது. ஆனால், இந்த நேரத்தில் நமது ஆசான் எம்.ஆர்.அப்பன் அவர்கள் கூறிய "நாம் பெற்றுக்கொண்டிருக்கும் உரிமைகளும், ஊதியமும் யாருடைய கருணையினாலோ, காருண்யத்தினாலே பெறப்பட்டவையல்ல, மாறாக நமது விடாப்பிடியான போராட்டத்தினாலும், அளப்பறிய தியாகத்தினாலும் அரசின் கரங்களிலிருந்து பிடுங்கப்பட்டவையே" என்ற வார்த்தைகள் தான் களம்காண தட்டி எழுப்புகிறது. தமிழ்நாட்டில் அரசு ஊழியர் வரலாற்றில் 1984ல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஆரம்பித்த பிறகுதான் மத்திய அரசுக்கு இணையான ஊதியம், மேம்படுத்தப்பட்ட ஊதியம், பொதுத்துறை நிறவனங்களுக்கு இணையான ஊதியம் என பல்வேறு கோரிக்கைகளை வடிவமைத்து, அதற்கான களத்தை உருவாக்கி ஊதியமாற்றங்களையும் பறிக்கப்பட்ட உரிமைகளையும் மீளப் பெற்றுள்ளோம்.

**வட்ட, மாவட்டப் பேரவைகள்:**

அப்படிப்பட்ட விடிவெள்ளியான ஸ்தாபனத்தின் வட்ட, மாவட்டப் பேரவைகளை தற்போது நாம் நடத்திக்கொண்டிருக்கின்றோம். நாம் ஸ்தாபனத்தை இறுகப்பற்றி அதன் விரிவாக்கத்தை முன்னெடுத்துச்செல்வதே, அதன் கூர்முனையை மேலும் கூர் தீட்டுவதே நமக்கான விடியல் என்பதை மீண்டும், மீண்டும் காலம் நமக்கு கற்றுக்கொடுத்துக் கொண்டே இருக்கின்றது. எனவே வட்ட, மாவட்டப் பேரவைகளில் பழைய ஓய்வுதியம் பெறுவதற்கான வியூகம் அமைத்திட விவாதித்திடுவோம்.

**ஸ்தாபன விரிவாக்கம்:**

பேரவைகள் வெறும் சம்பிரதாயமாக நடத்திடாமல், அனைத்து துறை தோழர்களை அணுகி கடந்தகால வரலாறுகளையும், அதன் மூலம் பெற்ற உரிமைகளும், ஊதிய மாற்றங்களும், நடப்புகால ஆட்சியாளர்களின் காலம்தாழ்த்தும் நடவடிக்கையையும் எடுத்துக்கூறி, எதிர்காலம் நமக்கான கோரிக்கைகளை வென்றெடுக்க ஒன்றுகூட வேண்டிய அவசியத்தை எடுத்துரைக்க வேண்டும். ஸ்தாபன விரிவாக்கத்தின் இலக்கானது அனைவரையும் ஸ்தாபனப்படுத்துவதே. அதற்கான இலக்கை நோக்கி சென்றிட வட்ட, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மற்றும் செயற்குழு கூட்டங்களை அனைத்து பிரதிநிதிகளும் கூடும் விதமாக கூட்டி விவாதித்து, விவாதத்தின் தொகுப்பாக முடிவுகளை மேற்கொள்வதும், அந்த முடிவுகளை பரவலாக்கி தனி நபர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பொறுப்பு வழங்கப்பட்டு செயல்படுத்துவதே இலக்கை அடைவதற்கான பாதையாகும்.

**வட்ட, மாவட்டப் பேரவைகள்:**

உறுப்பினர்களிடம் கோரிக்கைகளின் அவசியத்தையும், அதன் பின்னால் உள்ள ஆட்சியாளர்களின் அரசியல் நிலைபாடுகளையும், அதன் தாக்கங்களால் நமது கோரிக்கைகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன என்பதை விளக்கிட வேண்டியுள்ளது. கோரிக்கைகளை வென்றெடுத்திட நமக்கான போராட்டமும், அப்போராட்டத்தில் நமது முழுமையான பங்கேற்பின் அவசியத்தையும் எடுத்துரைக்க வேண்டியுள்ளது. அவ்வாறு நடைபெற்ற கடந்தகால போராட்டங்கள்தான் நாம் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கும் உரிமைகள் மற்றும் ஊதியங்கள் என்பதை விளக்கிட வேண்டும். சமுதாயப் பிரச்சனைகளிலிருந்து ஊழியர் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டும், ஊழியாகள் பிரச்சனைகளை சமுதாயப் பிரச்சனைகளோடு இணைத்துக் கொண்டும், ஆழமான கருத்துப் பிரச்சாரம் ஊழியர் மத்தியில் கொண்டு செல்ல இப்பேரவைகள்

பயன்பட வேண்டும். எனவே, நமக்குள் புகுத்தப்பட்டுள்ள நுகர்வுக்கலாச்சாரம், தனிநபர் சிந்தனை, சாதி, மத கருத்துக்கள் போன்றவற்றை புறந்தள்ளி ஒன்றுகூடி போராடிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும். இதுவே, பேரவையின் முக்கிய பொருளாக இருக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் இணைதளம் மிகப்பெரிய பிரச்சார ஊடகமாக மாறியுள்ள நிலையில், நமது பேரவை நிகழ்வுகள் நடைபெறும் முன்பும், நடைபெற்ற பிறகும் ஊடகங்களின் மூலமாகவும், நேரடி பிரச்சாரங்களின் மூலமாகவும், சுற்றறிக்கையின் மூலமாகவும் ஊழியர்களிடையே பேசு பொருளாக மாற்றிட வேண்டும். பேரவையில் நமது போர்வாளான அரசு ஊழியர் மாத இதழ் இலக்கு அமைந்திட சந்தா சேகரிக்கப்பட வேண்டும். டைரி பாக்கி மற்றும் மாநில மையத்திற்கான நிதிநிலுவைகள் நேர் செய்திட வேண்டும். பேரவையில் விவாதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அற்கு எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தொகுப்புரை வழங்கி ஏற்கப்பட வேண்டும்.

**மாநிலப்பேரவை நவம்பர் 8 - திருப்பூர்:**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநாடு பேரவை என்பது ஊழியர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் பேரவையாக அமையும் என்பதுதான் கடந்த கால வரலாறு. அதைப்போலவே தற்போதும் நமக்கான பழைய பயனளிப்பு ஓய்வுதியத்தைப்பெறுவதற்கான சமரசமற்ற போராட்டத்தை நோக்கிய பாதையை இப்பேரவை தீர்மானிக்கும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கடந்தகால போராட்டங்கள் ஊழியர்களிடையே நம்பிக்கையை பெற்றுள்ளது. போராட்டத்தின் வடிவமும், காலமும் ஊழியர்களின் பங்கேற்பும்தான் கோரிக்கைகளை வென்றெடுக்கும். அவ்வாறு போராட்டத்தில் பங்கேற்கும் ஊழியர்களே அரசு ஊழியர் இயக்கத்தின் எதிர்கால முன்னணிப் படையினராக களம் காண்பார்கள். நாம் தனியாகவும், தோழமைச்சங்கங்களுடனும் இணைந்து நடத்தும் போராட்டங்கள் நமது கோரிக்கைகளை நிறைவேற்றிட அரசை தூண்டியிருக்கிறது. ஆனால், கோரிக்கைகளை வென்றெடுத்திட இலட்சக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்புடன் நடைபெறும் போராட்டங்களாலேயே சாத்தியமாகும்.

ஊழியர்களின் கோரிக்கைகளை பொய்யான காரணங்களைச்சொல்லி தொடர்ந்து காலம்தாழ்த்தி வரும் ஆட்சியாளர்களிடமிருந்து கோரிக்கைகளை வென்றெடுத்திட, ஊழியர்களை ஒன்றுபடுத்தி, திட்டமிட்ட போராட்டக்களம் அமைக்கும் இடம்தான் திருப்பூர் பேரவை.

பழைய பயனளிப்பு ஓய்வூதியத்திட்டத்தை பெற்றிட, அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் நிரப்பிட, ஆய்வுக்கூட்டங்கள் என்றபெயரில் அதிகாரிகளின் ஆணவப்போக்குகளை தடுத்து நிறுத்திட, குறைக்கப்பட்ட கருணை அடிப்படை நியமனங்களை மீண்டும் அமுல்படுத்திட, சிறப்புகாலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் பெறும் ஊழியர்களை காலமுறை ஊதியத்தில் நிரந்தரப்படுத்திட, அவுட்சோர்சிங், காண்ட்ராக்ட் நியமனங்களை தடுத்து ஒழித்திட, சாலைப்பணியாளர்களின் 41 மாதகால பணி நீக்க காலத்தை முறைப்படுத்திட, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக்கிட, பெண் அரசு ஊழியர்களின் சிறப்பு சலுகைகளை அளித்திட, தொழில்நுட்ப ஊழியர்களின் ஊதிய முரண்பாடுகளை களைந்திட, அமைச்சுப்பணியாளர்களின் ஊதிய மாற்றத்தை ஒழுங்கமைக்க கோரிட, 21 மாத கால ஊதிய மாற்ற நிலுவைத்தொகையை பெற்றிட, மத்திய அரசுக்கு இணையான குறைந்தபட்ச ஊதியம் மற்றும் ஓய்வூதியம் பெற்றிட, மருத்துவக்காப்பிட்டுத்திட்டத்தை அரசே ஏற்று நடத்திட, பட்டப்படிப்பு முடித்த இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கிட, நிர்வாகத் தீர்ப்பாயம் அமைத்திட, காலத்திற்கு ஒவ்வாத அரசு ஊழியர்களின் நடத்தை விதிகளை ரத்து செய்திட கோரிக்கைகளுக்கான தீர்வை நோக்கி பயணிப்போம். நமக்கான கோரிக்கைகளை வென்றெடுத்திட நாம் ஒன்று திரள்வோம். நவம்பர் 8ல் நடைபெறும் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் பங்கேற்க திருப்பூர் நகரில் சங்கமிப்போம். விவாதிப்போம். தீர்மானிப்போம். ●

# மாநில பிரதிநிதித்துவ பேரவை வரவேற்புக்குழு அமைப்பு கூட்டம் – திருப்பூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவ பேரவை வருகிற நவம்பர் -8 அன்று நடத்திட வேண்டும் என்று மாநில செயற்குழு தீர்மானித்தவாறு பேரவைக்கான. வரவேற்புக்குழு அமைப்புக் கூட்டம் 05.09.2025 வெள்ளிக்கிழமை திருப்பூர் காமாட்சி திருமண மண்டபத்தில் மாவட்ட தலைவர் (பொறுப்பு),சி.பாண்டியம்மாள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத்தலைவர் S.மதன்குமார் வரவேற்புரையாற்றினார். வரவேற்புகுழு தலைவர் அ.நிசார் அகமது முன்னாள் மாநில செயலாளர், வரவேற்புகுழு செயலாளர் மா.பாலசுப்பிரமணியன் மாவட்ட செயலாளர், வரவேற்பு குழு மாவட்ட பொருளாளர் J.அந்தோணி ஜெயராஜ், உள்ளிட்ட 139 பேர் வரவேற்பு குழுவில் தேர்வு செய்யப்பட்டவர்களை முன்மொழிந்து மாநிலத்தலைவர் மு.பாஸ்கரன் சிறப்புரையாற்றினார். மாநில துணைத்தலைவர்கள் மு.செல்வராணி, சி.பரமேஸ்வரி, ச.தினேஷ், ஆ.அம்சராஜ், தே.முருகன், வே.விஜயகுமரன் மாநில செயலாளர்கள், க.நீதிராஜா, வே.விஜயகுமரன் ஆ.ஜெசி, மாநில பொருளாளர் ஜெயசிங் சா.டானியல், துணைப்பொதுச் செயலாளர்கள், கே.மகாலிங்கம், அண்ணா குபேரன், மற்றும் முன்னாள் மாவட்ட தலைவர்களும், தோழமை துறைவாரிச்சங்க மாநில மாவட்ட நிர்வாகிகள் சிறப்புரையாற்றினர். பொதுச்செயலாளர் மு.சீனிவாசன், நிரைவுரையாற்றினார். மாவட்ட செயலாளர் மா.பாலசுப்பிரமணியன் நன்றியுரையாற்றினார். J.அந்தோணி ஜெயராஜ், துணைத்தலைவர், R.ராமன், M.மேகலிங்கம், தா.வைரமுத்து மாவட்ட இணை செயலாளர்கள், N.அன்னபூரணி, J.கிருஷ்ணமூர்த்தி, R.ஆதிலட்சுமி, M.ரம்யா, ப.விஸ்வநாதன், S.சத்யகீதா,S.சின்ராசு, R.கருப்பன், N.கண்ணன், S.சுகந்தன், M.லட்சுமணன், P.தேன்மொழி,J.ரவி, R.முத்துசாமி, செ.காட்டுராணி, K.செந்தில்குமார், L.தில்லையப்பன், S.சுமதி, N.சிவக்குமார், A.பாலு, M.கதிரவன், K.R.ஆறுச்சாமி, V.பர்வீன்பானு, S.மார்கண்டன், K.வெங்கிடுசாமி, S.தங்கபாண்டியன் உள்ளிட்ட அனைத்து வட்டக்கிளை நிர்வாகிகள் விழாவினை ஏற்பாடு செய்தனர். ●

கவிதை

# பேரிழப்பு

– M.S.ஆதி

அன்று போல் அவள் என்றுமே இருந்ததில்லை

கடுகடு பேச்சும்
கடுப்பேரிய முகமும்

உதாசீன பார்வையும்
உக்கிரம நடையும் என
உருமாறி போனாள்

அவளைப் போல அலுவலகத்தில் என்னிடம் எவரும்
அக்கறை கொண்டதில்லை

ஒரு மூத்த சகோதரியை போல் வழிநடத்தினாள்

ஒரே பட்டப்படிப்பு படித்ததினால் உதித்து பின்
உதிர்ந்தது உறவு

காரணம் இதுவென்று
காலங்கள் சொல்லட்டும் என கண்ணீரோடே
கடந்தேன்

இதுபோல்
பல அண்ணன்களையும்
பல அக்காக்களையும்
பல நண்பர்களையும்
நான் இழந்துள்ளேன்

இதுவரை என்னைப் பற்றி தெரியாத ஒன்று
இன்று தெரிந்து விட்டது

பழகிப்போன ஒன்றுதான்
பாழாய்ப்போன
"சாதி" ●

# மாவட்ட பேரவை நிகழ்வுகள்

## திருப்பூர்

7- ஆவது மாவட்ட பிரதிநிதித்துவ பேரவைக் கூட்டம் 05.09.2025 வெள்ளிக்கிழமை, காலை 10.30 மணிக்கு மாநகராட்சி அலுவலகம் முன்பு பிரதிநிதிகள் அணி வகுப்புடன் TNHREA கலைக்குழு தாரை-தப்பட்டை முழக்கத்துடன் காமாட்சியம்மன் திருமண மண்டபம் முன்பு கொடியேற்றம் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை மாவட்ட தலைவர் C. பாண்டியம்மாள் (பொறுப்பு) கொடியேற்றி வைத்தார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியினை சங்கத்தின் பொதுச்செயலாளர் மு. சீனிவாசன் அவர்கள் ஏற்றி வைத்தார். விண்ணதிரும் முழக்கங்களுடன் கொடி வானுயர பறந்தது அதனை தொடர்ந்து தியாகிகளுக்கான வீர வணக்கம், ஸ்தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி முறையாக மாவட்ட பிரதிநிதி பேரவை துவங்கியது.

மாவட்ட தலைவர் (பொறுப்பு) C.பாண்டியம்மாள் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் மு.சீனிவாசன் துவக்கவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் M.மேகலிங்கம் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைத் தலைவர் J.அந்தோணி ஜெயராஜ் வரவேற்புரையாற்றினார். மாவட்ட செயலாளர், மா.பாலசுப்பிரமணியன் வேலை அறிக்கையும் மாவட்ட இணைச் செயலாளர் R.ராமன் வரவு-செலவு அறிக்கையும் தாக்கல் செய்து விவாதத்திற்குபின் ஒப்புதல் பெறப்பட்டது. K.ரங்கராஜ் மாவட்ட செயலாளர் CITU, S.சுப்பிரமணியன் முன்னாள் மாநில உதவிச் செயலாளர் BSNL ஊழியர் சங்கம், S.பானுமதி மாவட்ட செயலாளர் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், அ.பிரபு செபாஸ்டியன் மாவட்ட செயலாளர் TNPTF, க.ராஜேந்திரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர், ஜாக்டோ ஜியோ, S.பாலகிருஷ்ணன் மாவட்ட செயலாளர் TNGPA, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். S.மதன்குமார், மாவட்ட துணைத் தலைவர், தா.வைரமுத்து, மாவட்ட இணைச் செயலாளர், ஆகியோர் தீர்மானங்கள் முன்மொழிந்தனர். காலியாக உள்ள நிர்வாக பொறுப்பு தேர்வு நடைபெற்றது. மாவட்ட தலைவர் C. பாண்டியம்மாள், மாவட்ட பொருளாளர் J.அந்தோணி ஜெயராஜ், துணைத்தலைவர்கள் D.சாந்தி, ப.ஆறுமுகம், R.ஆதிலட்சுமி. மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் அண்ணம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து மாநில துணைத்தலைவர் ஆ.அம்சராஜ் நிறைவுரையாற்றினார். பணி ஓய்வு பெற்ற அ.ராணி மாவட்டத் தலைவர். செ.முருகசாமி மாவட்ட பொருளாளர், ஆகியோருக்கு கதர் ஆடை போர்த்தி நினைவு பரிசு வழங்கி பாராட்டு விழா நடைபெற்றது. இறுதியாக இல.தில்லையப்பன் நன்றி கூறினார்.

## கள்ளகுறிச்சி




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கள்ளக்குறிச்சி மாவட்டம் மாவட்ட பேரவைஇன்று 28.09.2025 உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. அரசு ஊழியர் சங்க பதாகையை மாவட்ட தலைவர் தோழர் ரவி மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் மகாசமேளனத்தின் பதாகையினை மாநில துணைத்தலைவர் தோழர் தினேஷும்

ஏற்றி வைத்தனர் பின்பு தியாகிகளுக்கு வீரவணக்கம் அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நடைபெற்ற மாவட்ட பேரவை நிகழ்ச்சிகளை மாவட்ட தலைவர் ரவி தலைமையேற்றி நடத்தினார். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் மணிராஜ் வரவேற்பு உரையாற்றினார் மாவட்ட இணைச் செயலாளர் தோழர் விஜயா அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாநில துணை பொதுச் செயலாளர் தோழர் மகாலிங்கம் துவக்க உரையாற்றினார். மாவட்ட இணை செயலாளர் தோழர் ரங்கசாமி வேலை அறிக்கையும் மாவட்ட பொருளாளர் தோழர் சாமிதுரை பொருளாளர் அறிக்கையும் வாசித்தனர் பின்னர் அறிக்கையின் மீது வடக்கிளை நிர்வாகிகள் விவாதத்தில் பங்கேற்றனர் விவாதத்திற்கு தொகுப்புரை வழங்கப்பட்டது. மாவட்ட நிர்வாகிகள் தோழர்கள் ஆறுமுகம், மணிராஜ், செந்தில், வட்டக்கிளை நிர்வாகிகள் காஞ்சனாமேரி, விஜயராணி, செந்தில், செல்லதுரை, சின்னமணி, மணிகண்டன் தாமோதரன், கோவிந்தராஜ், கோகிலா ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட துணைத் தலைவர் மூர்த்தி- தமிழ்நாடு அரசு ஊழிர் சங்க விழுப்புரம் மாவட்ட செயலாளர் தோழர் சிவக்குமார்- தமிழ்நாடு கண் மருத்துவ உதவியாளர் சங்க மாநில துணைத்தலைவர் தோழர் அன்பழகன். - தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் சந்திரசேகரன். - தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் மாவட்ட தலைவர் தோழர் பிரபாகர் - ஊரக வளர்ச்சித் துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் ஜார்ஜ்வாஷிங்டன் - தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்க மாவட்ட பொருளாளர் தோழர் பூவாள் - தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்க முன்னாள் து.தலைவர் செல்லதுரை - தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்க மாவட்ட தலைவர் தோழர் தயாநிதி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மேனாள் மாநில துணைத்தலைவர் தோழர் கே தங்கராசு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில செயலாளர் தோழர் அனந்தகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட மகளிர் துணைக்குழு நிகழ்வில் மகளிர் துணைக்குழு உறுப்பினர் விஜயராணி வரவேற்பு உரையாற்றினார். மாவட்ட அமைப்பாளர் தோழர் சந்திரா மேரி நடந்த வேலைகள் குறித்தும் மகளிர் துணைக் குழு தோழர்கள் கண்ணையன், காஞ்சனாமேரி, வள்ளி, தெய்வானை, பூவாள், கோகிலா, உள்ளிட்டோர் தீர்மானங்கள் முன்மொழிந்தனர். மாநில துணைத்தலைவர் தோழர் கே.சி.ஏ.தினேஷ் நிறைவுரையாற்றினார் இறுதியில் மாவட்ட துணை தலைவர் தோழர் வீரபுத்திரன் நன்றி கூறினார்.

**மயிலாடுதுறை**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மயிலாடுதுறை மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவை 05.10.2025 மாவட்டத் தலைவர் தோழர் *R*.கலா தலைமையில் மயிலாடுதுறை *TNROA* சங்க கட்டடத்தில் நடைபெற்றது. *TNGEA* கொடியினை மாவட்டத் தலைவர் தோழர் *R*.கலா அவர்களும், *AISGEF* கொடியினை துணைப் பொதுச் செயலாளர் தோழர் *V*.சோமசுந்தரம் அவர்களும் ஏற்றிவைத்தனர். தரங்கம்பாடி வட்டத் தலைவர் *A*.சாந்தி அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். மயிலாடுதுறை வட்டத் தலைவர் *A*.அருள் வரவேற்புரையாற்றினார். மாநில துணைப் பொதுச் செயலாளர் தோழர் *V*.சோமசுந்தரம் பேரவை கூட்டத்தை துவக்கிவைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் *D*.இளவரசன் வேலை அறிக்கையினை

சமர்ப்பித்து உரையாற்றினார்.மாவட்டப் பொருளாளர் தோழர் K.ஜவஹர் வரவு-செலவு அறிக்கையினை சமர்ப்பித்தார்.

TARATDAC மாவட்டத் தலைவர் D.கணேசன், JAC பொதுச் செயலாளர் T.ராயர், TNGPA மாவட்டச் செயலாளர் L.பிரேம்சந்திரன், மேனாள் மாவட்டத் தலைவர் T.திருஞானசம்பந்தம், TNROA மாவட்டச் செயலாளர் S.தென்னரசு, TNHREA மாவட்டத் தலைவர் S.ரமேஷ், TNGAPA மாவட்டச் செயலாளர் K.சுரேந்திரநாத் ஜவஹர், P.வேம்பு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விவாதங்களுக்கு பின்னர் தொகுப்புரை வழங்கி அறிக்கைகள் ஒப்புதல் பெறப்பட்டது. புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட துணைத் தலைவர் M.இராமச்சந்திரன், R.வெங்கடகிருஷ்ணன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.மாவட்ட துணைத் தலைவர் D.சிங்காரவேலு, சீர்காழி வட்டச் செயலாளர் M.அருள்பெருமாள் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தனர்.மாநிலச் செயலாளர் S.வளர்மாலா, நிறைவுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் K.இராமதேவன் நன்றி கூறினார். பேரவையில் 41 பெண்கள் உட்பட 73 தோழர்கள் பங்கேற்றனர்.

### கிருஷ்ணகிரி



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கிருஷ்ணகிரி மாவட்ட பிரதிநிதித்துவ பேரவை மாவட்ட தலைவர் B. சந்திரன் தலைமையில் 27.09.2025 TNROA, சங்க கட்டடத்தில் நடைப்பெற்றது. இப்பேரவையினை மாநில துணைத்தலைவர் ச.தினேஷ், துவக்கவுரையாற்றி தொடங்கி வைத்தார். அறிக்கைகள் முன்மொழியப்பட்டு, அறிக்கை மீது விவாதம் நடத்தப்பட்டு வரப்பெற்ற விவாதங்களுக்கு தொகுப்புரை வழங்கப்பட்டு அறிக்கைக்கு ஒப்புதல் பெறப்பட்டது. துணை பொதுச் செயலாளர் தோழர். வெ.சோமசுந்தரம், சிறப்புரையாற்றினார். துணை பொதுச் செயலாளர் தோழர். அண்ணா. குபேரன், நிறைவுரை வழங்கி சிறப்பித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் M.திம்மராஜ் நன்றி கூறி பேரவையை நிறைவு செய்தார். இப்பேரவையில் மாநில மைய கட்டட புனரமைப்பு நிதியாக ரூ.1,00,000 மாநில மையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ●

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை அறிவிப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை நிகழ்வுகள் 08.11.2025 அன்று ஹார்வி குமாரசாமி திருமண மண்டபம் திருப்பூர் என்ற முகவரியில் நடைபெறவுள்ளது.

பொருள்:

பொதுச் செயலாளர் அறிக்கை, வேலை அறிக்கை, நிதிநிலை அறிக்கை, விவாதங்களுக்கு தொகுப்புரை மற்றும் தீர்மானங்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**மு.சீனிவாசன்**

பொதுச் செயலாளர்

பெறுநர் :

மாநில பிரதிநிதித்துவப் பேரவை

உறுப்பினர்கள்

# வட்ட பேரவை நிகழ்வுகள்

### செஞ்சி



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், செஞ்சி கிளையின் வட்ட பேரவை கூட்டம் வட்ட துணைத் தலைவர் தோழர் ஜெ.காஞ்சனா தலைமையில் செஞ்சி வட்டார வளர்ச்சி அலுவலக கூட்ட அரங்கில் 12.09.2025 மாலை நடைபெற்றது.

அஞ்சலி தீர்மானத்தினை மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் மு.வீமன் வாசித்தார். வரவேற்புரையினை வட்ட இணை செயலாளர் தோழர் எம். வடிவாம்பாள் நிகழ்த்தினார். தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட இணை செயலாளர் தோழர் ஆ.ஜா. பார்த்தீபன் வட்ட பேரவையினை துவக்கி வைத்து உரையாற்றினார். வட்ட செயலாளர் தோழர் கி.அபிராமி வேலை அறிக்கை மற்றும் வரவு செலவு தொடர்பான நிதி அறிக்கையினை சமர்ப்பித்தார்.

தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் தோழர் சு.தண்டபாணி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் தி.ஜெயந்தி, தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் கோட்ட செயலாளர் தோழர் அ.இரவிக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

வட்டப்பேரவை தீர்மானங்களை தோழர்கள் கோ.மணிமாறன், நெ.நித்யஸ்ரீ, கனகசுபா மற்றும் எஸ்.ஸ்ரீமதி ஆகியோர் முன்மொழிந்தனர். வட்ட பேரவைக்கான வேலை / நிதி அறிக்கை மற்றும் பேரவை தீர்மானங்கள் ஏக மனதாக ஏற்கப்பட்டன. பணி மாறுதல் மற்றும் பணி ஓய்வு காரணமாக ஏற்பட்ட காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு புதிய வட்ட தலைவராக தோழர் ஜெ.காஞ்சனா, வட்ட துணைத் தலைவராக தோழர் வெ.சுரேஷ்குமார், மாவட்ட செயற்குழு உறுப்பினராக தோழர் கனகசுபா, ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். விழுப்புரம் மாவட்ட தலைவர் தோழர் கு. சரவணன் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கிளை நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து நிறைவுரையாற்றினார். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் கனகசுபா நன்றியுரையாற்றினார்.

இப்பேரவைக் கூட்டத்தில் மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர் / மேல்மலையனூர் வட்டத் தலைவர் தோழர் சு. கலா, செஞ்சி வட்ட துணைத் தலைவர் க.மனோகரன் TNRDOA, செஞ்சி வட்டார தலைவர் தோழர் மணிகண்டன் TNRDOA, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் வட்ட இணை செயலாளர் தோழர் ச.சுந்தரபாண்டியன், செஞ்சி வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) தோழர் ப.நடராஜன், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க வல்லம் ஒன்றிய நிர்வாகி தோழர் பி.பரமேஸ்வரி, கே. உமா முன்னணி தோழர்கள் ஆ.கங்காதரன், கே.இராமதாஸ், இந்துமதி, நேதாஜி, வனிதா, ருக்மணி மீனா, சதீஷ் குமார், பிரபு, சத்யா, தமிழ்செல்வி உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

### வாணாபுரம் 1

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கள்ளக்குறிச்சி மாவட்டம் வாணாபுரம்1 வது வட்டப்பேரவை. 12.09.2025 வட்டார



வளர்ச்சி அலுவலகத்தில் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் துவங்கியது அரசு ஊழியர் சங்கம் கொடியினை வட்ட தலைவர் தோழர் காஞ்சனாமேரி மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்க கொடியினை மாவட்ட துணை தலைவர் தோழர் செந்தில்முருகனும் ஏற்றி வைத்தனர்.

முதலாவது வட்டக்கிளை பேரவைக்கு வட்டத் தலைவர் தோழர் காஞ்சனா மேரி தலைமை தாங்கினார். வட்ட துணைத் தலைவர் தோழர் ஸ்டாலின் அனைவரையும் வரவேற்றார். வட்ட இணைச் செயலாளர்சரசு அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைத்தலைவர் செந்தில் முருகன் துவக்க உரையாற்றினார். வட்ட இணைச் செயலாளர் அம்சவள்ளி வேலை அறிக்கையும் துணை தலைவர் தெய்வானை நிதி அறிக்கையும் வாசித்தார்கள். பின்னர் விவாதம் தொகுப்புரை நடைபெற்று ஒப்புதல் பெறப்பட்டது.

பேரவையின் தீர்மானங்களை வட்ட நிர்வாகிகள் தெய்வானை, அம்சவள்ளி, ராஜா, மற்றும் கீதா லெட்சுமி, காஞ்சனா, செல்வமணி, வெங்கடேசன் ஆகியோர் முன்மொழிந்தார்கள். வட்டக்கிளை காலியாக உள்ள நிர்வாகிகள் தற்போது வட்ட செயலாளராக உள்ள தோழர் ராஜேந்திரன் மற்றும் பொருளாளர் சங்கரன் இரண்டு தோழர்களும் இடமாற்றம் செய்யப்பட்டதால் அவருக்கு பதில் புதிய வட்டச் செயலாளராக தொழர் பாபு (நில அளவைத் துறை) வட்ட பொருளாளராக தோழர் அன்பரசு (பொது சுகாதாரத்துறை) அவர்களையும் பேரவையில் புதிய நிர்வாகியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய நிர்வாகிகள் அறிமுகப்படுத்தி மாவட்டத் தலைவர் தோழர் ரவி சிறப்புரையாற்றினார்.

மேலும் பேரவையில் மாவட்ட இணைச் செயலாளர் தோழர் விஜயா, சத்துணவு ஊழியர் சங்க மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் சந்திராமேரி சுகாதார ஆய்வாளர் சங்கர் தொடர் வெங்கடேசன் கிராம சுகாதார சங்கம் சார்பில் தோழர் செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார் இறுதியில் மாவட்ட இணைச் செயலாளர் மணிராஜ் நிறைவுரையாற்றினார் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏயேசுமணி நன்றி கூறினார். இந்த பேரவையில் 50க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**சீர்காழி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சீர்காழி வட்டப் பேரவை 13.09.2025 காலை வருவாய் கிராம ஊழியர் சங்க கட்டடத்தில் வட்டத் தலைவர் தோழர் K.இராமதேவன் தலைமையில் நடைபெற்றது.

*TNRDOA* மாநில துணைத் தலைவர் தோழர் A.சௌந்தரபாண்டியன் துவக்கவுரையாற்றினார். வட்டச் செயலாளர் தோழர் M.அருள்பெருமாள் அவர்களால் வேலை அறிக்கையும், வரவு - செலவு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்களுக்கு பின்னர் ஒப்புதல் பெறப்பட்டது. புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட இணைச் செயலாளர் தோழர் P.கணேசன், *TNROA* மாவட்டச் செயலாளர் தோழர் S.தென்னரசு, *TNSOU* நிர்வாகி தோழர் S.கனிமொழி, *TNNMEA* மாவட்ட துணைத் தலைவர் தோழர் T.தமிழ்வாணி, *TNHREA* மாவட்டத் தலைவர் தோழர் S.ரமேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்டச் செயலாளர் தோழர் D.இளவரசன் நிறைவுரையாற்றினார். வட்ட இணைச் செயலாளர் தோழர் G.லெட்சுமணன் நன்றி கூறினார்.

### சூலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோவை மாவட்டம் சூலூர் வட்டக் கிளை எட்டாவது வட்டக்கிளைபேரவையானது வெ நாகராஜ் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் அறிக்கை வட்டக்கிளை செயலாளர் மா.சாமி நாதன் பொருளாளர் அறிக்கை கல்பனா காந்தி ஆகியோர் அறிக்கை சமர்பித்தனர். அறிக்கை மீது விவாதம் தீர்மானங்கள் முன்மொழிதல் மாவட்ட செயலாளர் விடுபட்ட நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. அங்கம்மாள் பேரூராட்சி அலுவலர் சங்கம் பானுலதா சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர், ரஷ்ய குமார் நெடுஞ்சாலைத்துறை ஊழியர் சங்கம், ஸ்டாலின் சிஐடியு, சூலூர் சின்ன மாரிமுத்து, அரசு ஊழியர் சங்க மாவட்ட இணை செயலாளர் செந்தில்குமார் நூலகத்துறை பாலகிருஷ்ணன், சாலை பணியாளர் சங்கம் நிர்மலா, கால்நடை பராமரிப்பு உதவியாளர் சங்கம் சின்னம்மாள், சத்துணவு ஊழியர் சங்கம் சூலூர் ஒன்றிய பொருளாளர் ரேவதி, சத்துணவு ஊழியர் சங்கம் சுல்தான்பேட்டை ஒன்றிய செயலாளர் கே பழனிச்சாமி, ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

### சாத்தூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சாத்தூர் வட்டக் கிளை பேரவை 18.09.2025 வியாழன் அன்று ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், நடைபெற்றது. வட்ட கிளைத் தலைவர் R.சகேயு தலைமையில் நடைபெற்ற பேரவையில் துணைத்தலைவர் M.கார்த்திகா வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் P.பாண்டித்துரை துவக்கவுரையாற்றினார். த.பாலம்மாள் வேலை அறிக்கையும், G.கண்ணன் வரவு செலவு அறிக்கையும் ஆகியோர் சமர்பித்தனர். ஆர். ஜானகி & அய்யம்மாள் மேனாள் மாநில செயலாளர் TNNMEA, எஸ்.இராமசுப்புராஜ் மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஒய்வூதியர் சங்கம், K.கோபால் மாவட்ட துணைத் தலைவர் TNRDOA, A.பாத்திமாமேரி மேனாள் மாவட்டச் செயலாளர், எம். செல்லப்பாண்டியன் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம் சாத்தூர், ஆர்.பாண்டிஸ்வரி வீராச்சாமி ஊரக வளர்ச்சித் துறை, N.விஜயலெக்ஷ்மி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்டச் செயலாளர் கா.கருப்பையா நிறைவுரையாற்றினார். இறுதியாக மாவட்ட செயற்குழு உறுப்பினர். V.கிரேஸ்மேரி நன்றி கூறினர். தலைவராக ஆர்.சகேயு, செயலாளராக த.பாலம்மாள், பொருளாளரா வீராச்சாமி, துணைத் தலைவர்களாக G.கண்ணன், M.கார்த்திகா, பாண்டியன் இணைச் செயலாளர்களாக பிரகாஷ், எம். நவநீதகிருஷ்ணன், ஆர்.சங்கரநாராயணன் மாவட்ட செயற்குழு உறுப்பினர் N.விஜயலெட்சுமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### தரங்கம்பாடி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தரங்கம்பாடி வட்டப் பேரவை 20.09.2025 மாலை தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்க கட்டடத்தில் வட்டத் தலைவர் தோழர் A.சாந்தி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் S.வினித்ராஜ் வரவேற்புரையாற்றினார். வட்ட இணைச் செயலாளர் தோழர் D.ஜெயபிரகாஷ் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். TNGPA மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் L.நக்கீரன் துவக்கவுரையாற்றினார். வட்டச் செயலாளர் தோழர் P.பாலாஜி அவர்களால் வேலை அறிக்கையும், வரவு - செலவு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்களுக்கு பின்னர் ஒப்புதல் பெறப்பட்டது. வட்ட துணைத் தலைவர் தோழர் N.பேபி அவர்களால் புதிய ஒய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட இணைச் செயலாளர் தோழர் K.விமல், மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் K.இராமதேவன், TNROA மாவட்டச் செயலாளர் தோழர் S.தென்னரசு, TNNMEA மாவட்டச் செயலாளர் தோழர் M.ராஜகமலம், TNHREA மாவட்டப் பொருளாளர் தோழர் K.ஜவஹர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்டச் செயலாளர் தோழர் D.இளவரசன் நிறைவுரையாற்றினார். வட்ட இணைச் செயலாளர் தோழர் A.கோகிலம் நன்றி கூறினார் வட்டச் செயலாளர்.

**நீலகிரி**



நீலகிரி மாவட்ட தமிழ்நாடு அரசு சங்கத்தின் உதகை வட்ட கிளையின் 15 ஆவது. வட்டப்பேரவை அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது வட்டத் தலைவர் தோழர் ராஜேந்திரன் தலைமை ஏற்றார் தோழர் ஜெயக்குமார் செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தார் பொருளாளர் அறிக்கை தோழர் குணசேகரன் சமர்பித்தார் அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் நாகராஜ் மாவட்ட துணைத் தலைவர் தோழர் சுப்பிரமணி மற்றும் குன்னூர் வட்ட கிளை தலைவர் தோழர் ராமு குட்டி வாழ்த்துரை வழங்கினார்கள்.

**மதுரை மேற்கு**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மேற்கு வட்டக்கிளை பேரவை 19.09.2025 அன்று மாலை 5.00 மணியளவில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை கணக்கு மற்றும் ஆட்சிபணியாளர் சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

முன்னாள் பொதுச்செயலாளர் ஆ.செல்வம் பேரணியை துவக்கி வைத்தார். வட்டக்கிளை தலைவர் சி.நடராசன் தலைமையில் பேரவை நடைபெற்றது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் சிவபாலன் வரவேற்புரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் ஆ.பரமசிவன் துவக்க உரையாற்றினார். செயலாளர் அறிக்கையை சி.சேதுராமபாண்டியன் மற்றும் நிதிநிலை அறிக்கை வே.முத்துலெட்சுமி ஆகியோர் சமர்ப்பித்தனர். வட்டக்கிளை துணைத்தலைவர்கள் வட்டக்கிளை இணைச்செயலாளர்கள் தீர்மானங்கள் முன் மொழிந்தார்கள். மாவட்டத்தலைவர் இரா. தமிழ் மாவட்டச் செயலாளர் க.சந்திரபோஸ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்.

அ.பாலமுருகன் மாவட்ட செயலாளர் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம். சு.கிருஷ்ணன் மாவட்ட தலைவர் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் பொ.கண்ணதாசன் முன்னாள் பொதுச்செயலாளர் தமிழ்நாடு அரசு புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்கம். இரா.சிவக்குமார் மாவட்டத் தலைவர் தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை கணக்கு மற்றும் ஆட்சி பணியாளர் சங்கம். சு.பாண்டிச்செல்வி மாவட்ட இணை செயலாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் நிறைவாக மாநிலச்செயலாளர் க.நீதிராஜா நிறைவுரையாற்றினார்.

வட்டக்கிளை இணைச்செயலாளர் அப்பள்ளி நன்றி கூறினார். இந்நிகழ்வில் வட்டக்கிளை நிர்வாகிகள் ஜெ.சிவகுரும்பன் தி.நாகராஜன் சி.எம்.மகுடீஸ்வரன் வி. மணிமாறன் ஆகியோர் உள்ளிட்ட மேற்கு வட்டக்கிளை நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். ●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**Tamilnadu Government Employees' Association**

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம் (பதிவு எண் 237/84)

எண்.46, தேரடித்தெரு. திருவல்லிக்கேணி. சென்னை - 600 005

28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அண்ணா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் லில்லி புஷ்பம்**


கடித எண்: 22/2025 நாள்: 16.09.2025

பெறுநர்:

**தலைமைச் செயலாளர்**
தமிழ்நாடு அரசு
தலைமைச்செயலகம்
சென்னை-600 009

ஐயா,

பொருளர்: தமிழ்நாடு அரசு - வேளாண்மைத்துறை - தொழிலாளர்துறை - பட்டுவளர்ச்சித்துறை - அதிகாரிகள் - காணொலி ஆய்வுக் கூட்டம் - அநாகரீகப்பேச்சு - ஊழியர் விரோத நடவடிக்கைகள் - கண்டனம் தெரிவித்தல் சம்பந்தமாக.

தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்களையும் குறிப்பாக மக்கள் நலன்சார்ந்த திட்டங்களையும் அனைத்து துறை ஊழியர்களும் சிறந்த முறையில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை செய்துவருகிறார்கள். அரசுத்துறைகளில் சுமார் 4.5 லட்சம் காலிப்பணியிடங்கள் இருந்தாலும், அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மக்களிடம் கொண்டு செல்வதில் எந்தவித தொய்வும் ஏற்பட்டுவிடக்கூடாது எனக்கருதி அந்தப்பணிகளையும் கூடுதல் பணிச்சுமையாக ஊழியர்கள் கூடுதல் நேரங்களில், விடுமுறை நாட்களில் என கடும் பணிப்பளுவுடன் செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் துறை அதிகாரிகள் அரசு ஊழியர்களின் பணிச்சுமைகளை கருத்தில் கொள்ளாமல் தொடர்ந்து எதேச்சதிகாரப்போக்குடன் நடந்துகொள்வது கண்டத்திற்குரியது. குறிப்பாக கடந்த ஆகஸ்ட் 20 ஆம் தேதி வேளாண்மைத்துறை இயக்குனர் திரு.முருகேஷ் இ.ஆ.ப. அவர்கள் காணொலி ஆய்வுக்கூட்டத்தில் தனக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகளை மிகவும் கொச்சைத்தனமாக **நாட்களை தின்றுகொண்டிருக்கிறீர்கள் பன்றி மாதிரி, லொட்டு லொசுக்குன்னு, நொண்டி சாக்கு சொல்லிக்கொண்டிருக்காதீங்க, முட்டாள் மாதிரி பேசிட்டிருக்கீங்க** என்று பேசியது அரசு ஊழியர்கள் மத்தியில் மிகவும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தொழிலாளர் துறையில் உள்ள ஊழியர்கள் தங்களது நியாயமான கோரிக்கைக்காக 16.12.2024 அன்று கோரிக்கை அச்சடித்த அட்டையை பணி புரிந்த ஊழியர்களை இணை ஆணையர் உயர்திரு.விமலநாதன் அவர்கள் ஊழியர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு மிரட்டியுள்ளார். மேலும் குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. ஜனநாயக அடிப்படையில் கோரிக்கை அணிந்து பணிபுரிவதற்குக்கூட தமிழ்நாட்டில் உரிமை இல்லாத நிலை என்பது மிகவும் வேதனையளிக்கக்கூடியதாக உள்ளது.

பட்டுவளர்ச்சித்துறையின் வசமுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அரசு (வருவாய்துறை) வசம் ஒப்படைக்க வேண்டாமென அத்துறை ஊழியர்கள் கடந்த 21.07.2025 அன்று தற்செயல் விடுப்பு விண்ணப்பித்துவிட்டு பெருந்திரள் முறையீடு செய்துள்ளனர். அதற்கு ஊழியர்களுக்கு ஊதியம் பிடித்தம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகள் ஊழியர்களுக்கு அரசின் மீதான அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய நாட்டின் அரசுக்குடிமகன் என்ற அடிப்படையில் நியாயமான கோரிக்கைக்காக ஜனநாயக முறையில் கோரிக்கைகளை வலியுறுத்தி போராடுவதை தடுக்க நினைப்பது, ஜனநாயக விரோத நடவடிக்கையாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கருதுகிறது.

எனவே, மேற்கண்ட துறைகளில் நடைபெற்றுள்ள ஊழியர் விரோத நடவடிக்கைகளுக்கு உரிய விசாரணை செய்து ஊழியர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், இதுபோன்ற நிகழ்வுகள் மற்ற துறைகளில் நடைபெறாத வகையில் தக்க மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.


**(மு. பாஸ்கரன்)**
மாநிலத்தலைவர்
செல்.9442409442

**(மு.சீனிவாசன்)**
பொதுச்செயலாளர்
செல்.9443845602

# திண்டிவனம் நகரமன்ற உறுப்பினர் ரம்யா ஊழியர் விரோத போக்கை கண்டித்து ஆர்ப்பாட்டம்

திண்டிவனம் நகராட்சி இளநிலை உதவியாளர் தோழர் சி.முனியப்பன் அவர்களை நகரமன்ற உறுப்பினர் ரம்யா, அவரது கணவர் ராஜா, நகர்மன்ற தலைவரின் கணவர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோரால் வன்கொடுமை மற்றும் அவமரியாதை செய்யப்பட்டதை கண்டித்தும் நகர்மன்ற உறுப்பினர் ரம்யா, அவரது கணவர் ராஜா, நகர் மன்ற தலைவரின் கணவர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட அனைவரின் மீதும் தமிழ்நாடு அரசும் காவல்துறையும் காலம் தாழ்த்தாமல் சட்டரீதியான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க விழுப்புரம் மாவட்ட மையத்தின் சார்பில் திண்டிவனம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக 15.09.2025 அன்று மாலை 5:00 மணி அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் தோழர் கு.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் ர.சுதாகர் வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் தோழர் இரா.சிவக்குமார் கோரிக்கை விளக்க உரையாற்றினார்.தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் வி.இளங்கோபிரபு, மாவட்ட இணை செயலாளர் தோழர் ஆ.ஜா. பார்த்தீபன், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட தலைவர் ஜெ.ஜெய்சங்கர், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட இணை செயலாளர் தோழர் விமல்ராஜ், CITU மாவட்ட துணைத் தலைவர் பி.குமார், தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் ர.சுதாகர் மேற்படி சங்கத்தின் முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர் செல்வகுமார், தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சுப் பணியாளர் சங்க மாநில துணைத்தலைவர் தோழர் வ.காந்திமதி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் தி.ஜெயந்தி, தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அனைத்து ஓய்வூதியர் சங்க செஞ்சி கோட்ட தலைவர் தோழர் அர.ரவிக்குமார், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாவட்ட பொருளாளர் தோழர் இரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர். இந்திய தொழிற்சங்க மையம் மாவட்ட செயலாளர் தோழர் ஆர்.மூர்த்தி கண்டன பேருரையாற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் தோழர் க.அன்பழகன் நன்றி உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள் வட்ட கிளை நிர்வாகிகள், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட இணை செயலாளர் தோழர் டி.செல்வம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் சு.கலா, மாவட்ட தணிக்கையாளர் தோழர் குபேரன் மரக்காணம் முன்னாள் வட்ட செயலாளர் ப.தனசேகர், விக்ரவாண்டி வட்ட செயலாளர் தோழர் காமராஜன், திண்டிவனம் வட்ட நிர்வாகி தோழர் ரவி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் அ.உமா, ஒன்றிய நிர்வாகிகள் மேல்மலையனூர் ஒன்றிய நிர்வாகிகள் தோழர்கள் ஜெயலட்சுமி, சீத்தா, சுமதி, காஞ்சனா, பாரதிராஜா, வானூர் ஒன்றியம் அனுசுயா, லதா, சரளா, மயிலம் ஒன்றியம் மாந்துளிர், ஜெ.விஜயலட்சுமி, ஒலக்கூர் சக்தி உள்ளிட்ட சத்துணவு நிர்வாகிகள், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட துணை தலைவர் கி.பக்தவச்சலம் உள்ளிட்ட தோழமை சங்க/ துறைவாரி சங்க நிர்வாகிகள், வளவனூர் பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் திரளாக பங்கேற்றனர். ●

# சேலம் மாவட்ட மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் உள்ள குறைபாடுகளை கலைந்திட வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சேலம் மாவட்டத்தின் சார்பில் மருத்துவ காப்பீடு திட்டத்தில் உள்ள குறைபாடுகளை கலைந்து மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலமாக இலவச மருத்துவ சிகிச்சை பெற்றிட, மருத்துவ காப்பீடு திட்டத்தின் அடையாள அட்டையை உடனடியாக வழங்கிட சேலம் மாவட்டத்தில் அரசு ஊழியர்கள் மருத்துவ சிகிச்சை தொடர்பான காப்பீட்டுத் தொகையைப் பெற்றிட கலந்தாய்வுக் கூட்டம் நடத்த கோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று18.9.25 வியாழக்கிழமை நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் திருவரங்கன் தலைமையேற்றார். தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்க சேலம் மாவட்ட செயலாளர் தோழர்ஜான் ஆஸ்டின் துவக்க உரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சேலம்மாவட்ட செயலாளர் தோழர் சுரேஷ் கோரிக்கை விளக்க உரையாற்றினார். கூட்டத்தில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித் துறை சத்துணவு ஊழியர்கள் கல்வித்துறை, சுகாதார ஆய்வாளர்கள், பொது சுகாதாரத் துறை, மோட்டார் வாகன பராமரிப்பு, சத்துணவு ஊழியர்கள், அரசினர் தொழிற்பயிற்சி, மருந்தாளுனர்கள், ஆய்வக நுட்பனர்கள், கால்நடை பராமரிப்பு, சாலை பணியாளர்கள், ஒய்வூதியர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைச் சங்கங்களின் தோழர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்புரையாக வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் தோழர் அர்த்தனாரி, அனைத்து துறை ஒய்வூதியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் தோழர் ராஜ்குமார்

சிறப்புரையாற்றினார்கள். நிறைவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் தோழர் மு செல்வராணி நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் தோழர் சண்முகம் நன்றி உரையாற்றினார். கொட்டும் மழையிலும் நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ●

# ஜாக்டோ – ஜியோ பெருந்திரள் முறையீடு –08.09.2025

**திருச்சி**

ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் உயர்மட்ட குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 08.09.2025 அன்று மாவட்ட தலைநகரங்களில் தேர்தல் கால வாக்குறுதிகள் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்ற வலியுறுத்தி பெருந்திரள் முறையீடு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பால் பாண்டி, நீலகண்டன் நவநீதன் , உதுமான் அலி மற்றும் குமாரவேல் ஆகியோர் கூட்டு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நவநீதன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நீலகண்டன், பால் பாண்டி தலைமையுரையாற்றினார்கள். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உதுமான் அலி மற்றும் குமாரவேல் ஆகியோர் கோரிக்கை விளக்க உரையாற்றினார்கள். தமிழ்நாடு அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் சங்க மாநில தலைவர், மாநில ஒருங்கிணைப்பாளர் அன்பரசன் மற்றும் அரசு கல்லூரி பேராசிரியர் கழக மாநில தலைவர் டேவிட் லிவிங்ஸ்டன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். அனைத்து ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர் சங்க மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். பெருந்திரள் முறையீட்டில் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ராஜலட்சுமி அவர்களிடம் கோரிக்கை சாசனத்தை மாநில ஒருங்கிணைப்பாளர், உயர் மட்ட குழு உறுப்பினர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைத்து சங்கத்தின் நிர்வாகிகள் வழங்கினார்கள். ஆசிரியர் சங்க நிர்வாகி குமாரகுரு நன்றி கூறினார்.

**மதுரை**

ஜாக்டோ - ஜியோ - மதுரை மாவட்டம் சார்பாக 08.09.2025 பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும்.அரசு துறைகளில் 30% காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும். சிறப்புகாலமுறை ஊதியத்தில் பணியாற்றும் அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். கருணை அடிப்படை பணி நியமனத்திற்கான உச்சவரம்பு 5% ஆக குறைக்கப்பட்டதை ரத்துசெய்து மீண்டும் 25% ஆக உயர்த்தி வழங்க வேண்டும். 21 மாத ஊதியமாற்ற நிலுவையை வழங்கவேண்டும். இடைநிலை ஆசிரியர்களுக்கும், முதுகலை ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், உடற்கல்வி இயக்குனர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோருக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் 90 சதவீதத்திற்கும் மேலான ஆசிரியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அரசாணை 243 ரத்து செய்ய வேண்டும்.சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிக்காலமாக வரன்முறை படுத்த வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலக முன்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் க.சந்திரபோஸ்,பா.

பாண்டி, வி.ச.நவநீதகிருஷ்ணன், மு.பொற்செல்வன்,சி.பீட்டர் ஆரோக்யராஜ் தலைமையில் பெருந்திரள் முறையீடு நடைபெற்றது. மாநில ஒருங்கிணைப்பாளர். எம்.பி.முருகையன் சிறப்புரையாற்றினார். இதில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள்- அரசு பணியாளர்கள் பெருந்திரளாக கடந்து கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை

ஜாக்டோ ஜியோ பெருந்திரள் முறையீடு அரசு துறைகளில் 30% காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும். சிறப்புகாலமுறை ஊதியத்தில் பணியாற்றும் அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். கருணை அடிப்படை பணி நியமனத்திற்கான உச்சவரம்பு 5% ஆக குறைக்கப்பட்டதை ரத்துசெய்து மீண்டும் 25% ஆக உயர்த்தி வழங்க வேண்டும். கோரிக்கையை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டுத்தலைமையில் நடைபெற்ற து. தோழர் ஜபருல்லா, இரா. ரெங்கசாமி, எம். ராஜாங்கம். வி. எம். கண்ணன் தலைமையேற்றனர். மாநில ஒருங்கிணைப்பாளர் நா. சண்முக நாதன் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

### திருவாரூர்

ஜாக்டோ ஜியோ பேரமைப்பின் சார்பாக திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது அதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தோழர் செங்குட்டுவன் மற்றும் கல்லூரி ஆசிரியர் கழக பொறுப்பாளர் முருகானந்தம் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் தோழர் செ.பிரகாஷ் துணைப் பொதுச் செயலாளர் வெ. சோமசுந்தரம் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் சார்பாக முருகானந்தம் ஆசிரியர்களின் சார்பாக தோழர் உமாநாத் உள்ளிட்ட பல தோழர்கள் கண்டன உரையாற்றினர் நிறைவாக மாவட்ட வருவாய் அலுவலரிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் அரசு ஊழியர்கள் கல்லூரி பேராசிரியர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

### கள்ளக்குறிச்சி

ஜாக்டோ ஜியோ அமைப்பின் சார்பாக கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஒன்பது அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பெருந்திரள் ஆர்ப்பாட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாநில ஒருங்கிணைப்பாளர் பொன் செல்வராஜ் மாநில உயர்மட்ட குழு உறுப்பினர் லட்சுமிபதி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்னு நாலு 2023க்கு பிறகு அரசு பணியைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற புதிய ஓய்வூதிய திட்டத்திற்கு பதிலாக பழைய ஓய்வு திட்டத்தை அமல்படுத்த வேண்டும் பள்ளிக்கல்வித்துறையில் வெளியிடப்பட்டிருக்கின்ற அரசாணை எண் 243 ரத்து செய்ய வேண்டும் அரசின் பல்வேறு துறைகளை காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் சாலை பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தினை முறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இறுதியாக மாநில துணை பொச்செயலாளர் மகாலிங்கம் தமிழ்நாடு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், அனந்த் கிருஷ்ணன், அண்ணாதுரை மற்றும் அரசு ஊழியர் ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### தருமபுரி

தருமபுரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் எம். சுருளிநாதான், பி. எம். கௌரன்,இராசா.ஆணந்தன், கே. பாஸ்கர், ஆகியோர் தலைமை வகித்தனர். தமிழக தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொதுச்செயலாளர் கோ. காமராஜ், ஜாக்டோ ஜியோ நிதி காப்பாளர் கே. புகழேந்தி,தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஏ. தெய்வானை முன்னாள் மாவட்ட செயலாளர் ஏ. சேகர், பொருளாளர் எம். அன்பழகன், வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் துரைவேல், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் முகமது இலியாஸ், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்ட செயலாளர் பொன். தமிழ்மணி, தமிழ்நாடு உயர்நிலைப் மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட தலைவர் பி. துரைராஜ், கிராம நிர்வாக முன்னேற்ற சங்க மாவட்ட தலைவர் அகிலன், அனைத்து ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் பழனிசாமி சத்துணவு ஓய்வூதியர் சங்க மாவட்ட செயலாளர் சி. காவேரி ஆகியோர் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

### மயிலாடுதுறை

ஜாக்டோ-ஜியோ பெருந்திரள் முறையீடு ஆர்ப்பாட்டம் 08.09.2025 மாலை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தோழர் D.இளவரசன், R.செல்வம், U.அன்பரசன், T.ஆதீஸ்வரன் மற்றும் S.சண்முகசுந்தரம் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நடைபெற்றது. அரசு ஊழியர்/ ஆசிரியர் பெருந்திரளாக பங்கேற்று தேர்தல்கால வாக்குறுதியான புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி முழக்கமிட்டு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வருக்கும், தலைவர்/ அரசு கூடுதல் தலைமை செயலாளருக்கும் (ஓய்வூதியக்குழு) முறையீடு அளிக்கப்பட்டது.

### கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டம் ஜாக்டோ ஜியோவின் சார்பாக பெருந்திரள் முறையீடு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் சந்திரன் ஆசிரியர் மாரப்பன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது அந்த நிகழ்வில் தியோட்டர் ராபின் சன் சிறப்புரையாற்றினார் கல்லூரி பேராசிரியர் ரவி, மணிவேல் ஊரக வளர்ச்சித் துறை தோழர் கோபால கண்ணன்,பொது சுகாதாரத்துறை கந்தசாமி , மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் ஜெகதாம்பிகை தலைமை ஆசிரியர் சங்கம் சார்பாக நாராயணன் தமிழ்நாடு மருந்தாளுனர் சங்கத்தின் சார்பாக தோழர் பெருமாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கோரிக்கை உரையாற்றினர் நிறைவாக தமிழக முதல்வருக்கு ஜாக்டோ ஜியோவின் சார்பாக கோரிக்கை மனு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வழங்கப்பட்டது.

### திருப்பத்தூர்

ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு சார்பாக 08-09-2025 மாலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து பழைய ஓய்வு ஊதியம் திட்டத்தை வழங்க கோரி பெருந்திரள் முறையீட்டு மனு அளிக்கப்பட்டது. ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தோழர் க.அருள்மொழி வர்மன் (TNROA) தலைமை வகித்தார். தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி அமைப்பின் மாவட்ட செயலாளர் தோழர் திருநாவுக்கரசு வரவேற்புரை

நல்கினர். மாவட்டத் தலைவர் தோழர் பாபு கோஷங்களை எழுப்பினார். ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பில் உள்ள பல்வேறு துறைவாரி சங்கங்களின் நிர்வாகிகள் தோழர் பிரேம்குமார் TNRDOA,தோழர் பாண்டியன் TNRDOA தோழர் அரவேந்தன் TNVOAMS மற்றும் ஆசிரியர் கூட்டணி அமைப்பின் தோழர் நல் ஞானசேகர் உள்ளிட்ட நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர். ஊரக வளர்ச்சித்துறை மாநில தலைவர் தோழர் காந்திமதி நாதன் கோரிக்கையை குறித்து விளக்க உரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்(TNGEA) மாநிலத் துணைத் தலைவர் தோழர் தினேஷ் சிறப்புரை நிகழ்த்தினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருப்பத்தூர் மாவட்ட பொருளாளர் தோழர் ராஜ்குமார் நன்றி உரையாற்றினார். இதில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் - அரசு பணியாளர்கள் பெருந்திரளாக கடந்து கலந்து கொண்டனர்.

### வேலூரில்

ஜாக்டோ-ஜியோ பேரமைப்பின் சார்பில் தேர்தல் கால வாக்குறுதிகளான பழைய ஓய்வூதிய திட்டம் அனைவருக்கும் நடைமுறைபடுத்த கோருதல், உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றிட கோரி இன்று 08.09.2025 மாலை வேலூர் மாவட்ட ஆட்சியர் வே.அர.சுப்புலட்சுமி அவர்களிடம் பெருந்திரள் முறையீடாக கோரிக்கை மனு அளித்து பேசினர். ஜாக்டோ ஜியோ பேரமைப்பின் வேலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ட்டி.டி.ஜோஷி, எம்.ஜெயகாந்தன்,, ஆ.ஜோசப்அன்னையா, ஜி.சீனிவாசன், ஆகியோர் கூட்டு தலைமையில் மாநில ஒருங்கிணைப்பாளர் கோ.பாக்கியராஜ் முன்னிலையில் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர் தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் கழக மாநிலத்தலைவர் செ.நா.ஜனார்த்தனன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாவட்ட செயலாளர் அ.சேகர், தமிழ்நாடு வேளாண் பட்டதாரி ஆசிரியர் சங்க மாநில பொருளாளர் அக்ரி. இராமன், உருது வழி ஆசிரியர் சங்க மாநில பொதுச்செயலாளர் முகமதுஷாநவாஸ், ஆதிதிராவிடர் நல சங்க பொதுச்செயலாளர் துரை கருணாநிதி ஆகியோர் கோரிக்கை மனுவினை மாவட்ட ஆட்சியர் வே.அர.சுப்புலட்சுமி அவர்களிடம் பெருந்திரள் முறையீடாக கோரிக்கை மனு அளித்தனர்.

கோரிக்கை மனுவை அரசுக்கு அனுப்பிவைப்பதாக ஆட்சியர் அவர்கள் கூறினார். முன்னதாக ஜாக்டோ ஜியோ பேரமைப்பினர் ஆட்சியர் ஆலுவலக வளாகத்தில் கூடி கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர் இந்த நிகழ்விற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தீனதயாளன் வரவேற்று பேசினார். தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்ட செயலாளர் ஜி.டி.பாபு தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட தலைவர் ஆர். ஜெயக்குமார் மாநில துணை தலைவர் டி.ஜெயபிரகாஷ், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்ட தலைவர் எம்.எஸ். செல்வகுமார், செயலாளர் தனசேகரன், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் சங்க மாவட்ட பொருளாளர் ம.சினேகலதா, தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட பொருளாளர் எஸ்.சபீதா, தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி கணினி ஆசிரியர் சங்க மாவட்ட செயலாளர் ஜி.சீனிவாசன், லட்சுமிவெங்கடேஷ் மருந்தாளுநர் சங்க வேந்தன், ஊரக வளர்ச்சித்துறை பா.வேலு, சத்துணவு ஊழியர் சங்க கே.சுமதி ஆகியோர் உள்பட பலர் பேசினர். ●

# போக்குவரத்து ஊழியர்களின் போராட்டத்திற்கு ஆதரவு ஆர்ப்பாட்டம் – 15.09.2025

### திருச்சி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மைய முடிவின்படி 28 நாட்களுக்கு மேல் போராடுவோம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக சிஐடியு தொழிலாளிகளின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஆதரவு ஆர்ப்பாட்டம் இன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி 1, திருச்சிராப்பள்ளி 2 இணை இயக்குநர் வேளாண்மை அலுவலகத்தில் வட்டக்கிளை செயலாளர் தோழர் கருணாநிதி தலைமையில், மணப்பாறை வட்டக்கிளையில் வட்டக்கிளை செயலாளர் சுந்தர்ராஜன் தலைமையில், திருவெறும்பூர் வட்டக்கிளையில் தலைவர் சந்திரா தலைமையில், திருவரங்கம் வட்டக்கிளை தலைவர் சசிகலா தலைமையில், முசிறி வட்டக்கிளை தலைவர் அமுதா தலைமையில் மற்றும் துறையூர் வட்டக்கிளையில் வட்டக்கிளை செயலாளர் மணிமாறன் தலைமையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் பால்பாண்டி தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் நவநீதன் கோரிக்கை விளக்க உரையாற்றினார்.

திருச்சி மாவட்ட வருவாய் துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் பொன் மாடசாமி, சாலைப் பணியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் ஜீவானந்தம், ஐடிஐ சங்க கிளைச் செயலாளர் ராதா, தமிழ்நாடு அரசு புள்ளியியல் சார் நிலை அலுவலர் சங்கத்தின் மாநில செயலாளர் இமயவரம்பன், திருச்சிராப்பள்ளி 1வட்டக்கிளை தலைவர் சுரேஷ் பிரபு உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார்கள். ஆர்ப்பாட்டத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊழியர்கள் எழுச்சியோடு கலந்து கொண்டார்கள்.

### கரூர்

போராடிவரும், போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக, மண்மங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின், மண்மங்கலம் வட்டகிளை சார்பில் வட்டக்கிளை தலைவர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் செல்வராணி, சத்துணவு ஊழியர் சங்க ஒன்றியச் செயலர் ரம்யா வட்டகிளை பொருளாளர் கலையரசி உள்ளிட்ட அரசு ஊழியர்கள் கலந்து கொண்டு முழக்கம் இட்டனர்.

பரமத்தி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டகிளை செயலாளர் கோபி, வட்டகிளை இணை செயலாளர் சுரேஷ், FERA கூட்டமைப்பின் வட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயராஜ் மற்றும் பெருவாரியான அரசு ஊழியர்கள் கலந்து கொண்டு முழக்கம் இட்டனர். மற்றும் குளித்தலை வட்டக் கிளை சார்பாக ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

### தருமபுரி

போராடும் போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி,. நல்லம்பள்ளி, காரிமங்கலம். பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி வட்டக்கிளையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஊழியர்கள் எழுச்சியோடு கலந்து கொண்டார்கள்.

### கோவை

தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும், பணி ஓய்வு பெறும் நாளிலேயே பணப்பலன்கள் வழங்கப்பட வேண்டும், பணியில் இருக்கும் போது இறந்த ஊழியர்களின் குடும்பத்தார்களுக்கு கருணை அடிப்படையில் வழங்க வேண்டும் உள்ளிட்ட நியாயமான வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி போராடுகின்ற தோழர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மைய முடிவின்படி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோவை மாவட்ட மையத்தின் சார்பாக 5 இடங்களில் ஆர்ப்பாட்டம். நடைபெற்றது. கலந்து கொண்ட தோழர்கள் மொத்தம்..98. ஆண்கள்.47. பெண்கள்.51

### காஞ்சிபுரம்

போக்குவரத்து தொழிலாளர் தொடர் போராட்டத்திற்கு ஆதரவாக காஞ்சிபுரம் மாவட்ட அரசு ஊழியர் சங்கம் சார்பாக ஆதரவு ஆர்ப்பாட்டம் 6 இடங்களில் நடைபெற்றது இந்த நிகழ்வில் அரசு ஊழியர்கள் 186 பெண் தோழர்கள் உள்ளிட்ட 315க்கும் மேற்பட்ட கலந்துகொண்டு போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்தனர்

### கள்ளக்குறிச்சி

போக்குவரத்து தொழிலாளர் தொடர் போராட்டத்திற்கு ஆதரவாக கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு ஊழியர் சங்கம் சார்பாக ஆதரவு ஆர்ப்பாட்டம்4 இடங்களில் நடைபெற்றது இந்த நிகழ்வில் அரசு ஊழியர்கள் 45 பெண் தோழர்கள் உள்ளிட்ட 112க்கும் மேற்பட்ட கலந்துகொண்டு போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### திருப்பத்தூர்

தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருக்கின்ற போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஆதரவாக திருப்பத்தூர் மாவட்டத்தில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த நிகழ்வில் அரசு ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டு கோரிக்கை முழக்கமிட்டனர் மாவட்டம் திருப்பத்தூர்.

### திருவள்ளூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில மைய முடிவின் படி ஓய்வூதிய பலன்கள் உள்ளிட்ட அகவிலைப்படி மற்றும் நிலுவைத் தொகைகளை வழங்க கோரி தொடர்ச்சியாக போராட்டம் நடத்துகின்ற போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஆதரவாக திருவள்ளுவர் மாவட்டத்தில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டு கோரிக்கை முழக்கமிட்டன

### கிருட்டினகிரி மாவட்டம்

ஆதரவு ஆர்ப்பாட்டம் போக்குவரத்து தொழிலாளர்களின் தொடர் காத்திருப்பு போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருட்டினகிரி மாவட்ட மையத்தின் சார்பில் நான்கு வட்டங்களில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அரசு ஊழியர்கள் 35 பெண் தோழர்கள் உள்ளிட்ட 98 க்கும் மேற்பட்டர் கலந்துகொண்டு போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்தனர்

### மதுரை

மாநிலமைய முடிவின்படி 29 நாட்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் போக்குவரத்து கழக தொழிலாளர்களின் காத்திருப்பு போராட்டத்திற்கு ஆதரவாக மதுரை மாவட்டத்தில் வட்டக்கிளைகவாரியாக கீழ்கண்ட அலுவலகங்களில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கிழக்கு வட்டக்களை, மதுரை மருத்துவக் கல்லூரி வளாகம்., மேற்கு வட்டக்கிளை, கல்லூரி கல்வி இணைய இயக்குனர் அலுவலகம், வடக்கு வட்டக்கிளை நெடுஞ்சாலைத்துறை அலுவலகம், (மாவட்ட நீதிமன்றம் அருகில்),தெற்கு வட்டக்கிளை,முனிச்சாலை ஆரம்ப சுகாதார நிலையம் ,மேலூர் வட்டக்கிளை,வட்டாட்சியர் அலுவலகம் ,உசிலம்பட்டி வட்டக்கிளை, ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,திருமங்கலம் வட்டக்கிளை

வட்டாட்சியர் அலுவலகம்,வாடிப்பட்டி வட்டக்கிளை, ஊராட்சி ஒன்றிய அலுவலகம,பேரையூர் வட்டக்கிளை வட்டாட்சியர் அலுவலகம் போக்குவரத்து தொழிலாளர் தொடர் காத்திருப்பு போராட்டத்திற்கு ஆதரவு ஆர்ப்பாட்டம் மதுரை மாவட்டத்தில் ஒன்பது இடங்களில் ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது இதில் 66 பெண் தோழர்கள் உள்ளிட்ட 177 பேர் கலந்து கொண்டு போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள், துறைச் சங்க, தோழமைச்சங்க நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### செங்கல்பட்டு

போக்குவரத்து தொழிலாளர் தொடர் போராட்டத்திற்கு ஆதரவாக செங்கல்பட்டு மாவட்ட அரசு ஊழியர் சங்கம் சார்பாக வட்ட அளவில் நடத்திய ஆர்பாட்டம் செங்கல்பட்டு மாவட்டத்தில் மூன்று வட்ட கிளைகளில் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் 64 மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டு கோரிக்கை முழக்கமிட்டனர்.

### தென் சென்னை

மாநில மையத்தின் அறைகூவலின்படி போராடும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு ஆதரவாக தென் சென்னை மாவட்டத்தில் கிண்டி பகுதியிலும், சைதை நந்தனம் பகுதியிலும் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஆண்கள்: 42.பெண்கள்: 25 பேர் பங்கேற்றனர்.

### தேனி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக தேனி மாவட்டத்தில் ஐந்து இடங்களில் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் 90க்கு மேற்பட்ட அரசு ஊழியர்கள் கலந்து கொண்டு போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கைகளை உடனடியாக தமிழக அரசு நிறைவேற்ற கோரி கோரிக்கை முழக்கமிட்டனர்.

### திருப்பூர்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும், பணி ஓய்வு பெறும் நாளிலேயே பணப்பலன்கள் வழங்கப்பட வேண்டும், பணியில் இருக்கும் போது இறந்த ஊழியர்களின் குடும்பத்தார்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட நியாயமான வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி போராடுகின்ற தோழர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மைய முடிவின்படி இன்றைய தினம் 15.09.2025 மதிய நேர உணவு இடைவேளை, மற்றும் மாலை நேரத்தில் நடைபெற்றது.

தாராபுரம் வட்டக்கிளையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 10- ஆண்கள் 60 மொத்தம் 70- பேர் பங்கேற்றனர். உடுமலை வட்டக்கிளையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு மாலை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 10- ஆண்கள் 60 மொத்தம் 70- பேர் பங்கேற்றனர். திருப்பூர் தெற்கு வட்டக்கிளையில் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு மாலை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 7- ஆண்கள் 25 மொத்தம் - 32 பேர் பங்கேற்றனர். திருப்பூர் வடக்கு வட்டக்கிளையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 6- ஆண்கள் 15 மொத்தம் - 21 பேர் பங்கேற்றனர்.

அவிநாசி வட்டக்கிளையில் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றதுநடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 10- ஆண்கள் 18 மொத்தம் - 28 பேர் பங்கேற்றனர். காங்கேயம் வட்டக்கிளையில் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு மாலை நடைபெற்ற

ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 10- ஆண்கள் 35 மொத்தம் - 45 பேர் பங்கேற்றனர். பல்லடம் வட்டக்கிளையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 5 - ஆண்கள் 15 மொத்தம் - 20 பேர் பங்கேற்றனர்.

ஏழு வட்டக்கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் -58, ஆண்கள் -228 மொத்தம் 286 பேர் சிறப்பித்தனர்.

### பெரம்பலூர்

போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கு கடந்த 25 மாதங்களாக வழங்காமல் காலதாமதப்படுத்தும் தங்களது பணி ஓய்வுக்கான பணப்பலன்களை உடனே வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஆகஸ்ட் 18 முதல் காத்திருப்பு போராட்டத்தை நடத்தி வருகின்ற போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஆதரவு.

வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு. தலைமை T.பழனிச்சாமி வட்டக் கிளை தலைவர். பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவு துறை அலுவலகம் முன்பு தலைமையில் இரா ரமேஷ் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு பாரதிராஜா தலைமையில் வேப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு P.ராஜ்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து வட்ட கிளைகளிலும் அரசு ஊழியர் சங்கத்தின் வட்ட கிளை நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் துறைச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு கோரிக்கை முழக்கமிட்டனர்.

### கடலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் போக்குவரத்து ஊழியர்களின் வாழ்வாதார கோரிகைக்காக போராடிக்கொண்டிருக்கும் போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் மதியம் உணவு இடை வேலைளில் கடலூர் வட்ட கிளையில் சிறப்பாக நடைபெற்றது.

போக்குவரத்து ஊழியர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக அரசு ஊழியர் சங்கம் சார்பில் விக்கிரவாண்டி வட்ட கிளையில் உணவு இடைவேளை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தோழர் ஆ.புகழேந்தி, TNRDOA மாவட்ட தணிக்கையாளர் கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார். தோழர். வீ.ஏழுமலை, நன்றி உரை நிகழ்த்தினார்.

### நாகப்பட்டினம்

போக்குவரத்து தொழிலாளர்களின் காத்திருப்பு போராட்டத்தை அரசு அலட்சியத்தோடும், பாராமுகமாகவும், நிர்வாகிகளை அழைத்துப் பேசி தீர்வு காணாமலும் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறது. போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், போராடும் தொழிலாளர்களை அழைத்துப்பேசி உடனே தீர்வு காண வலியுறுத்தியும் நாகப்பட்டினம் வட்டக்கிளையின் சார்பாக மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு முன்பாகவும், வேதாரண்யம் வட்டக்கிளையின் சார்பாக தலைஞாயிறு, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### கள்ளக்குறிச்சி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் முடிவின்படி ஒரு மாத காலமாக காத்திருப்பு போராட்டம் நடத்தி வரும் போக்குவரத்து ஊழியர்களுக்கான ஆதரவு ஆர்ப்பாட்டம் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் எழுச்சியோடு நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் தோழர். L.ஆனந்த கிருஷ்ணன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கள்ளக்குறிச்சி வட்டக்கிளை சார்பில் மாவட்ட சுகாதார அலுவலகம் முன்பு மாலை நேர ஆர்ப்பாட்டம் வட்டச் செயலாளர் தோழர் குமாரதேவன் தலைமையில் நடைபெற்றது இதில் பொது சுகாதாரத்துறை அலுவலர்

சங்க மாவட்ட தலைவர் தோழர் ஆறுமுகம், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் சாமிதுரை, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் ரவி, அகில இந்திய தொழிற்சங்க மைய மண்டல துணைத் தலைவர் தங்க பாண்டியன், போக்குவரத்து பணிமனை நிர்வாகி கங்காச்சலம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள் நிகழ்ச்சியில் மாநில துணைப் பொதுச் செயலாளர் தோழர் மகாலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இறுதியில் தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்க மாவட்ட தலைவர் தோழர் தயாநிதி நன்றி கூறினார்.

### தென்காசி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தென்காசி மாவட்டம் சார்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி தென்காசி மாவட்டத்தில் நான்கு இடங்களில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வட்டாட்சியர் அலுவலகம் திருவேங்கடம், வட்டாட்சியர் அலுவலகம் கடையநல்லூர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் செங்கோட்டை, கோட்டாட்சியர் அலுவலகம் தென்காசி.

### மயிலாடுதுறை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், மயிலாடுதுறை மாவட்ட சார்பாக ஓய்வுபெற்ற போக்குவரத்து ஊழியர்களுக்கு 26 மாதங்களாக வழங்கப்படாமல் உள்ள ஓய்வூதிய பணப்பலன்களை வழங்கிட வலியுறுத்தி தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்திவரும் ஓய்வுபெற்ற போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலமைய முடிவின்படி மதியம் உணவு இடைவேளையில் மயிலாடுதுறை வட்ட அலுவலகத்தில் வட்டத் தலைவர் தோழர் A.அருள் தலைமையிலும், குத்தாலம் வட்ட அலுவலகத்தில் வட்டத் தலைவர் தோழர் R.கமலதாசன் தலைமையிலும், சீர்காழி வட்ட அலுவலகத்தில் வட்டத் தலைவர் தோழர் K.இராமதேவன் தலைமையிலும், தரங்கம்பாடி வட்ட அலுவலகத்தில் மாவட்ட இணைச் செயலாளர் தோழர் K.விமல் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாலை மாவட்ட துணைத் தலைவர் தோழர் D.சிங்காரவேலு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தோழர் D.இளவரசன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். TNROA மாவட்டச் செயலாளர் தோழர் S.தென்னரசு, TAMSA மாவட்டச் செயலாளர் தோழர் R.வனிதா, TNNMEA மாவட்டத் தலைவர் தோழர் K.இராமதேவன், சீர்காழி வட்டச் செயலாளர் தோழர் M.அருள்பெருமாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்டப் பொருளாளர் தோழர் K.ஜவஹர் நன்றி கூறினார்.

### திருவாரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில மைய முடிவின்படி திருவாரூர் மாவட்டத்தில் போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக தண்ணீலம்பட்ட கிளை அட்டாச்சியர் அலுவலகம் முன்பு திருத்துறைப்பூண்டி வட்ட கிளையில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மன்னார்குடி வட்டக் கிளையில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பும் கூத்தாநல்லூர் நீடாமங்கலம் முத்துப்பேட்டை திருவாரூர் வட்டக் கிளைகளில் சிறப்பாக ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் தோழர் செங்குட்டுவன் மாவட்ட பொருளாளர் சுப்பிரமணியன் மற்றும் மன்னார்குடி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநிலச் செயலாளர் தோழர் செ. பிரகாஷ் கலந்து கொண்டு கோரிக்கை விளக்க உரையாற்றினார் போக்குவரத்து ஊழியர்களுக்கு உடனடியாக தமிழக அரசு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி கோரிக்கை முழக்கமிட்டனர். ●

கட்டுரை

# தமிழுக்காக உயிர்நீத்த சங்கரலிங்கனார்

**– பெரணமல்லூர் சேகரன்**

விருதுநகர் மாவட்டத்தில் வசித்து வந்த சங்கரலிங்கனார் காங்கிரஸ் அரசின் முன்பாக 1956 சூலையில் 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தார். தனியாக மொழிவழி மாகாணம் வேண்டும். சென்னை மாகாணத்திற்குத் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்ட வேண்டும். அரசியல் தலைவர்கள் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சாதாரண மக்களைப் போல் வாழ வேண்டும். தேர்தல் முறையில் மாற்றம் வேண்டும். தொழில்கல்வி, இந்தியா முழுவதும் மதுவிலக்கு என்று பன்னிரெண்டு கோரிக்கைகளுடன், சூலை 27ந் தேதி சூலக்கரை மேட்டில் தனியாளாக உண்ணாவிரதத்தைத் துவக்கினார். அப்போது அந்த இடம் விருதுநகரிலிருந்து தூரத்தில் ஆட்கள் நடமாட்டமில்லாத பகுதியாக இருந்ததால், பொதுவுடைமைக் கட்சியினரின் ஆலோசனையின் பேரில் விருதுநகர் தேசபந்து மைதானத்தில் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். அப்போதிருந்த காங்கிரஸ் அரசு சங்கரலிங்கனாரின் கோரிக்கைகளை ஏற்கவில்லை. அதற்குள் சங்கரலிங்கனாரின் உண்ணாவிரதம் பல சலசலப்புகளை ஏற்படுத்த ஆரம்பித்துவிட்டது. ம.பொ. சிவஞானம்., அண்ணா, காமராசர், ஜீவானந்தம் உட்பட பல தலைவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லிக் கோரிக்கை விடுத்தனர், இருந்தும் உண்ணாவிரதம் நிறுத்தப்படவில்லை. நாளாக நாளாகச் சங்கரலிங்கனாரின் உடல்நிலை மோசமானது. விருதுநகருக்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசினார் அண்ணாத்துரை. அப்போது தொடர்ந்து மூன்று கடிதங்களை எழுதினார் சங்கரலிங்கனார்.

"பொதுஜனங்களின் விருப்பத்திற்கு மாறாகத் தவறான வழியில், கண்மூடித்தனமாகப் போய்க் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி ஒழிந்தே தீரும். அறிவுத் திறன் இருந்தால் திருத்திக்கொள்ளட்டும்" என்று 'எச்சரிக்கையுடன்' எழுதியிருக்கிறார். 76 நாட்கள்வரை அவருடைய உண்ணாவிரதம் தொடர்ந்தது. தமிழகத்தில் அப்போதிருந்த தின இதழ்களில் இதுகுறித்த செய்திகள் தினமும் வெளிவந்து கொண்டிருந்தன. அக்டோபர் 10ந் தேதி அன்று நிலைமை மோசமாகி சங்கரலிங்கனார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் அக்டோபர் 13, 1956 அன்று அவருடைய உயிர் பிரிந்தது. அப்போது சென்னை மாகாணத்தில் இந்தச் செய்தி பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சென்னை நகரக் கல்லூரி மாணவர்கள் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தனர். மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையிலிருந்த சங்கரலிங்கனாரின் உடல் மதுரை தத்தனேரியில் அடக்கம் செய்யப்பட்டபோது பல கட்சித் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர். இறந்தபின் தன் உடலைப் பொதுவுடைமைக் கட்சியிடம் ஒப்படைத்து, இறுதிமரியாதை செய்ய வேண்டும் என்று தெளிவாகக் கூறியிருந்தார் சங்கரலிங்கனார். அதையொட்டி அவரை அடக்கம் செய்வதில் துணை நின்றவர்கள் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள். கம்யூனிஸ்டுத் தலைவர் கே. டி. கே. தங்கமணி, கே. பி. ஜானகியம்மாவும் மருத்துவமனைக்குச் சென்று, பதிவேட்டில் கையெழுத்திட்டு, உடலைப் பெற்றனர். மதுரைத் தத்தனேரி சுடுகாட்டில் சங்கரலிங்கனார் உடல் தகனம் செய்யப்பட்டது. தியாகி சங்கரலிங்கனாரின் நினைவைப் போற்றும் வகையில், தமிழக அரசால் விருதுநகர் கல்லூரி சாலையில் நகராட்சி பூங்கா அருகில் 76 லட்சம் செலவில், மணிமண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

சங்கரலிங்கனாரின் 'தமிழ்நாடு' பெயர் சூட்டுவது குறித்த கோரிக்கைக்கு அவருடைய மறைவுக்குப் பிறகு அழுத்தம் கொடுக்கப்பட்டு பல இயக்கங்கள் அந்தக் கோரிக்கைகளை முன்வைத்தன. 1962 மார்ச்சில் நாடாளுமன்றத்தில் 'தமிழ்நாடு' கோரிக்கைக்காகத் தனி மசோதாவே கொண்டுவந்தபோது, அது தள்ளுபடி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 1964 சனவரியில் சென்னை மாநிலச் சட்டமன்றத்தில், தமிழ்நாடு பெயர் சூட்டத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோதும் அத்தீர்மானம் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னாளில் ஆட்சிக்கு வந்த அண்ணாவின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகத்தின் அரசு 1967, ஏப்ரல் 14 அன்று சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை 'தமிழக அரசு' ஆக மாறியது. அதன் தொடர்ச்சியாக, 1968 சூலை 18இல் சென்னை மாநிலத்தை 'தமிழ்நாடு' என பெயர் மாற்றம் செய்யும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பின்னர் நவம்பர் 23, 1968 இல் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. இதையடுத்து திசம்பர் 1, 1968இல் தமிழ்நாடு முழுக்கப் பெயர் மாற்றம் விழாவாகக் கொண்டாடப்பட்டபோது "சங்கரலிங்கனாருக்கு நன்றியும் வணக்கமும்" தெரிவிக்கப்பட்டது.

# AISGEF மாலை நேர தர்ணா போராட்டம் –29.09.2025

## திருச்சி



அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்கத்தின் பரிதாபாத் அறை கூவல் தீர்மானத்தின்படி மாவட்ட தலைநகரங்களில் தர்ணா போராட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் முனைவர் கா.பால் பாண்டி தலைமையில் 23.09.2025 மாலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. தர்ணா போராட்டத்தை தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் செல்வமோகன் துவங்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் நவநீதன் கோரிக்கை விளக்க உரையாற்றினார். மாவட்டத் தலைவர் பால் பாண்டி தலைமை உரையாற்றினார். தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பொன் மாடசாமி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் அல்போன்ஸ், தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர் சங்கத்தின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் கிருஷ்ணன், தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்க மாவட்டச் செயலாளர் கருணாநிதி, தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் மாநில துணைத் தலைவர் கலையரசி, மாவட்ட நிர்வாகிகள் ஜீவானந்தம், சண்முகம் பெரியசாமி மற்றும் வட்டக்கிளை நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநில துணைத் தலைவர் தோழர் செல்வராணி நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் தோழர் சிவசங்கர் நன்றி கூறினார். தர்ணா போராட்டத்தில் அனைத்து துறை ஊழியர்களும் கலந்து கொண்டார்கள்.

## திருவாரூர்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருவாரூர் மாவட்டத்தின் சார்பாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அறைகூவல் தீர்மானத்தின் படி திருவாரூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக தர்ணா ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் தோழர் சுதாகர் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன் கோரிக்கை விளக்க உரையாற்றினார் தோழமைச் சங்க நிர்வாகிகள் தோழர் விஜய் ஆனந்த், தோழர் மகாலிங்கம் தோழர் தட்சிணாமூர்த்தி, தம்பிதுரை உள்ளிட்ட தோழர்கள் கண்டன உரையாற்றினேன் நிறைவாக மாநில துணை பொது செயலாளர் வெ.சோமசுந்தரம் நிறை உரையாற்றினர் மாவட்ட பொருளாளர் சுப்பிரமணியன் நன்றிரை கூறினார்

## மயிலாடுதுறை

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன தேசிய செயற்குழு முடிவின்படி... PFRDA ஓய்வூதிய ஒழுங்காற்று ஆணைத்தைக் களைத்திட வேண்டும். NPS & UPS திட்டத்தில் செலுத்தப்பட்ட தொகைகளை அந்தந்த மாநிலங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அனைத்து சந்தாதாரர்களையும் EPS 95 கீழ்

வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத்தின் கீழ் கொண்டுவர வேண்டும், 8 வது ஊதியக்குழுவை உடன் அமைக்க வேண்டும். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய மாற்றம் என்பதை உறுதிப்படுத்திட வேண்டும் உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றிட மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 23.09.2025 மாலை TNGEA மாவட்டத் தலைவர் தோழர் R.கலா தலைமையில் மாவட்டத் தலைநகர் மாலை நேர தர்ணா போராட்டம் நடைபெற்றது. TNGPA மாவட்டத் தலைவர் தோழர் V.பழனிவேலு துவக்க உரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் தோழர் D.சிங்காரவேலு ரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தோழர் D.இளவரசன் கோரிக்கை விளக்கவுரையாற்றினர். மேனாள் மாவட்ட துணைத் தலைவர் தோழர் M.நடராஜன், சீர்காழி வட்டச் செயலாளர் தோழர் M.அருள்பெருமாள், TNROA மாவட்டச் செயலாளர் தோழர் S.தென்னரசு, TNHREA மாவட்டத் தலைவர் தோழர் S. ரமேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் P.கணேசன் நன்றியுரையாற்றினார்.

### சேலம்

புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்யும் சட்டத்தை திரும்ப பெற வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் சேலம் கோட்டை மைதானத்தில் கைப்பேசி விளக்கை எரியவிட்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதை கைவிட வேண்டும். மருத்துவ காப்பீட்டு திட்டத்தினை அனைவருக்கும் கட்டணம் இல்லாமல் மருத்துவ சிகிச்சை வழங்க வேண்டும். ஊதியக்குழு நிலுவைத் தொகையினை மீளப் பெற்றிட வேண்டும்.வெட்டி சுருக்கப்பட்ட தொழிலாளர் நல சட்டங்களை மீண்டும் வழங்க வேண்டும். அரசியலமைப்பு சட்டத்தின் படி மதசார்பின்மையை பாதுகாத்திட வேண்டும். மதிப்பூதிய தொகுப்பு புதிய அவுட்சோர்சிங் முறைகளை ரத்து செய்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட துணை தலைவர் கிரிராஜன் தலைமையில் தர்ணா போராட்டம் நடைபெற்றது. தர்ணா போராட்டத்தில் மாவட்ட செயலாளர் சுரேஷ் கண்டன உரையாற்றினார் போராட்டத்தை ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்க தலைவர் அருள்மொழி துவக்க உரையாற்றினார். வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில துணைத்தலைவர் வெ. அர்த்தநாரி நிறைவுறையாற்றினார் மாவட்ட தலைவர் சண்முகம் நன்றி உரையாற்றினார் இதில் அரசு ஊழியர்கள் பலர் பங்கேற்றனர்.

### கோவை

கடந்த. 16. 17. தேதிகளில். பரிதாபாத்தில். நடைபெற்ற அகில இந்திய. மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின். முடிவின்படி. 23.9.2025. மாலை நேர தர்ணா. போராட்டம். கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம். முன்பு மாவட்டத் தலைவர் ச ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தோழர். பா. செந்தில்குமார் விளக்க உரையாற்றினார். TNROA மாவட்டச் செயலாளர் கமலஹாசன்.. தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு உதவியாளர் முன்னேற்ற சங்கம். வெ. வெள்ளிங்கிரி தமிழ்நாடு சுகாதார பணிமனை போக்குவரத்து ஊழியர் சங்கம் மாநிலச் செயலாளர் தோழர். மணி தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை ஊழியர் சங்கம். மாநிலத் துணைத் தலைவர் மாலதி ராணி வாழ்த்துரை வழங்கினார்கள்.

தோழர். சின்ன மாரிமுத்து.TNHREAகோட்டத் தலைவர் பொள்ளாச்சி தோழர் சிவக்குமார். மாநிலத் துணைத் தலைவர் தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கம் தோழர் ரவி.TNGEA மாநில செயற்குழு உறுப்பினர் பத்மநாபன் மண்டல தலைவர் தமிழ்நாடு அரசு உதவி பெறும் கல்லூரி அலுவலகர் சங்கம். தோழர். மனோகரன். அம்சவேணி நன்றி உரையாற்றினார்.

## வேலூர்

வேலூர் மாவட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில், மாவட்ட தலைவர் தோழர்.T.D.ஜோஷி தலைமையில், மாவட்ட செயலாளர் தோழர்.M.S.தீனதயாளன் அவர்கள் முன்னிலையில், 23.09.2025 மாலை நேர தர்ணா போராட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நடைப்பெற்றது. இதில், மாவட்ட இணைச்செயலாளர் தோழர். தேவநேசன், மாவட்ட மகளிர் அணித்துணைத் தலைவர் தோழர்.ச.ஜோதி, வேலூர் வடக்கு வட்டக்கிளைச் செயலாளர் தோழர். கு.சபரிகிரிவாசன் மற்றும் மூத்த உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்றனர்

## மதுரை

கடந்த ஆகஸ்ட் 16 மற்றும் 17 தேதிகளில் டெல்லி, பரிதாபாத்தில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் முடிவின்படி மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி 23.09.2025 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாலை நேர தர்ணா மாவட்டத்தலைவர் இரா.தமிழ் தலைமையில் நடைபெற்றது. PFRDA ஓய்வூதிய நிதி ஆணைத்தைக் களைத்திட வேண்டும் NPS & UPS திட்டத்தில் செலுத்தப்பட்ட தொகைகளை அந்தந்த மாநிலங்களிடம் ஒப்படைக்க வேண்டும் அனைத்து சந்தாதாரர்களையும் EPS 95-ன் கீழ் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். 8-வது ஊதியக்குழுவை உடன் அமைக்க வேண்டும். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய மாற்றம் என்பதை உறுதிப்படுத்திட வேண்டும். Contract, Out Sourced, Daily Waged பணி நியமனங்களை தடுத்து நிறுத்த வேண்டும். அவ்வாறு பணி நியமனம் செய்யப்பட்டவர்களை நிரந்தரப்படுத்திட உள்ளிட்ட கோரிக்கைகளை இந்த நிகழ்வில் மாவட்ட துணைத்தலைவர்வர்கள்பெ. சந்திரபாண்டி, ஜெ.மகேந்திரன், மாவட்ட இணைச்செயலாளர்கள்த.மனோகரன், சி.பெரியகருப்பன்,சு.பாண்டிச்செல்வி,ப. ராம்குமார் கலந்து கொண்டனர். மாவட்டச்செயலாளர் க.சந்திரபோஸ் கோரிக்கை விளக்க உரையாற்றினார். க.நீதிராஜா மாநிலச்செயலாளர் நிறைவுறையாற்றினார், ஆ.பரமசிவன் மாவட்டப்பொருளாளர் நன்றி உரையாற்றினார்.

## கள்ளக்குறிச்சி



இதில் மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள், மற்றும் மகளிர் துணைக் குழு உறுப்பினர்கள், துறைச்சங்க, தோழமைச் சங்க நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் (AISGEF) தேசிய செயற்குழு முடிவின் அடிப்படையில் கோரிக்கைகளை நிறைவேற்ற மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி 23.09.2025 மாலை அளவில் கள்ளக்குறிச்சி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆட்சியர் மாலை நேர தர்ணா போராட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் ரவி தலைம தாங்கினார். கண்டன உரை தோழர் வீரபுத்திரன் மாவட்ட பொருளாளர் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கம். தோழர் சாமிதுரை மாவட்ட செயலாளர் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கம் தோழர் செந்தில் முருகன் மாநில துணை தலைவர் தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு தோழர் வேளாங்கண்ணி தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கம் மாநில துணைத் தலைவர் தோழர் மகாலிங்கம் மாநில துணைப் பொதுச் செயலாளர் சிறப்புரையாற்றினார். வட்டச் செயலாளர் தோழர் குமாரதேவன்.

அரியலூர்



பெரம்பலூர்



செங்கல்பட்டு



இராணிப்பேட்டை



தருமபுரி



தஞ்சாவூர்



நாமக்கல்



திருவள்ளூர்




Printed and Published by M.Srinivasan on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M.Baskaran Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com